Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-72 தை, 2024 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00

# நிகழ்நிலை காப்பு சட்டமூலம் கருத்துரிமைக்கு சாவுமணி



- எழுச்சியை ஏற்படுத்தக் கூடிய சமூக அரசியல் கட்டமைப்பே தேவை
- இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு (பாகம் –03)
- கரையோரத்துக்குள் முற்றாக முடக்கப்பட்டிருக்கும் கடற்றொழில் பொருளாதாரம்

ஆய்வு – அறிவு – நிமிர்வு

# கரையோரத்திற்குள் முற்றாக முடக்கப்பட்டிருக்கும் கடற்றொழில் பொருளாதாரம்



செல்வின்

**தா**யக மீனவர்களின் கடல் வளம் படிப்படியாக அபகரிக்கப்பட்டு வருகின்றது. நாங்கள் இன்னும் கரையோர மீன்பிடிக்குள் முடக்கப்பட்டிருக்கின்றோம். ஒரு கட்டத்திற்கு வெளியில் போக எத்தனித்தாலும் இந்தியாவினுடைய இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பு எங்களை நகர விடுவதில்லை. அதையும் தாண்டி வெளியில் போவதற்கு எங்களுடைய பொருளாதாரத்தின் ஆற்றல்களும் ஆளுமைகளும் போதுமானதாக இல்லை. அரசாங்கத்தின் சலுகைகளும் எங்களுக்கு கிடைப்பதில்லை. கடற்றொழில் பொருளாதாரம் முற்றாக கரையோரத்திற்குள் முடக்கப்பட்டிருக்கிறது.

கரையோரத்திலும், இப்போது கடலட்டை பண்ணைகளும் வேறு செயற்கையான நீர் வேளாண்மை முயற்சிகளும் எங்களுடைய பாரம்பரிய கரையோர மீன்பிடி பண்பாட்டை சிதைக்கின்றன. எனவே இன்னுமொரு கருவறுப்பு நடந்து கொண்டிருக்கின்றது. இப்படி எல்லா நிலைகளிலும் கருவறுப்புக்கள் தொடர்ந்து நடக்கின்றன. இது தொடர்பாக நாங்கள் தெளிவான செயற்பாட்டை நோக்கி நகர வேண்டும்.

எங்கள் மக்களை இல்லாதவர்களாக காட்டி 'நீங்கள் மற்றவர்களை விட வறுமையாக இருக்கின்றீர்கள், எனவே உங்களுக்கு சில சலுகைகள் தருகின்றோம். உங்களுக்கு கூடிய வருமானத்தை ஏற்படுத்தி தருகின்றோம். கடலட்டைப் பண்ணையை செய்தால் உங்களுக்கு நிரம்ப வருமானம் வரும். என்று சொல்லி அவர்களுக்கு ஆசை ஊட்டி சமூகத்தை சீரழிக்கின்ற விடயம் தான் நடக்கின்றது. எல்லா இடங்களிலும் இந்த இல்லாமை, இயலாமை என்ற இரண்டு தரப்புகள் இருக்கும். சமூகம் வேறுபட்டு இருக்கும். சமூக இடைவெளி கூடி காணப்படும். ஆனால் இங்கு உண்மையில் சாப்பாட்டுக்கு வழி இல்லாத பட்டினி சாவை எதிர்நோக்குகின்ற இல்லாமை இல்லை. இது ஒரு சார்பு வறுமை. என்னுடைய அயலானை போல் என்னாலும் ஆடம்பரமாக வெளிக்கிட முடியவில்லை. உடுத்த முடியவில்லை. அனுபவிக்க முடியவில்லை. செலவழிக்க

முடியவில்லை. உண்ண முடியவில்லை. பொழுதுபோக்கு செய்ய முடியவில்லை என்கின்ற ஏக்கம் இருக்கின்றது. இந்த ஏக்கம் தான் ஆபத்தானது. இந்த ஏக்கம் தான் தவறான வழிகளுக்குள் சிக்க வைக்கிறது.

நாம் உயிர் வாழ்வதற்காக, பட்டினியை தவிர்ப்பதற்காக, போசாக்கின்மையை குறைப்பதற்காக, வறுமையை தாண்டி வெளியே வர முயற்சிப்பதற்காக என்றால் மிக வரையறையான வாய்ப்புக்கள் இங்கு நிறையவே உண்டு. ஆனால் ஆசையின் நிமித்தம் ஏற்படுத்தப்படுகின்ற இந்த அபிவிருத்தி என்கின்ற விடயம் மிக ஆபத்தானது.

சிலவேளைகளில் சில சமூகங்களில் பாலியல் தொழில் விபச்சாரம் என்பவை ஒரு தவிர்க்க முடியாத வாழ்வியல் கலாசாரமாக மாறுகின்றது என்று சமூகவியலாளர்கள் கூறுவார்கள். அங்கு அடிப்படையான பட்டினியை தவிர்ப்பதற்காக போகின்றவர்களையும் விட ஆடம்பர வாழ்க்கையை தேடி போகின்றவர்கள் தான் பல மடங்கு அதிகமானவர்கள். அவர்களுடைய ஆடம்பர வாழ்க்கையையும் செலவுகளையும் ஈடுகட்டுவதற்காக அந்த சிக்கல்களுக்குள் போகின்றார்கள். எனவே இது மிக ஆபத்தானது. இந்த விடயங்களில் சமூக இடைவெளியை குறைப்பதற்கு ஆக்கபூர்வமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டி இருக்கின்றது.

எங்களது மிகப் பரந்த நிலத்தையும் வளத்தையும் கடலையும் கரையையும் எவ்வாறு கையாளப் போகின்றோம் என்ற விடயத்திற்கு நாங்கள் ஒரு கொள்கையை வகுத்து செய்ய வேண்டி இருக்கின்றது. இந்த விடயங்களில் சமூக இடைவெளி என்பதுவும் சமூக இடைவெளியை உந்துகின்ற மக்கள் வெளியேற்றம் என்பதுவும் மிகவும் ஆபத்தானவை. இந்த சமூக இடைவெளியை சமப்படுத்தும் நோக்கத்தில் தாங்களும் மேலெழ வேண்டும் என்பதற்காக சமூகத்தின் அடிமட்டத்தில் எந்தவித மனித வலு ஆற்றல்களும் இல்லாமல் வெளியேறுகின்றவர்கள் என்ன செய்ய போகின்றார்கள்? வெளிநாடுகளிற்கு சென்று மிக குறைந்த கூலிக்கு தான் வேலை செய்யப் போகின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கை பிரகாசமானதாக இருக்கப் போவதில்லை. ஆனால் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் அங்கு சென்று தங்களுடைய தலைமுறை வாழ்க்கையை அர்ப்பணித்த பிறகு அவர்களுடைய பிள்ளைகள் அடுத்த தலைமுறையில் அந்த தேசத்தின் மக்களாக மாறும் போது அவர்கள் கல்விகளில் அபிவிருத்தி அடைந்து சிறப்படைந்து மேல் நிலைக்கு போகலாம். அது இங்கே சமூக இடைவெளியை குறைக்குமா என்பது தொடர்பாக எல்லாம் நாங்கள் பேச வேண்டி இருக்கிறது.

புலம்பெயர்தல் என்பது வெறுமனே ஒரு எதிர்மறை காரணியாகவோ அல்லது சாதகமான காரணியாகவோ அமையலாம் என்று மட்டும் நாங்கள் பார்க்க முடியாது. வெள்ளை அல்லது கறுப்பு என்கிற முடிவுக்கு வர கூடாது. இரண்டிற்கும் இடையிலான ஒரு சாம்பல் நிறம் தான் சரி. அப்படி நிறைய விடயங்கள் எங்களிடம் இருக்கின்றன. எவ்வளவுக்கு நாங்கள் எங்களுடைய மூலதனங்களை பெருக்குவது? நாங்கள் எந்த துறையில் எங்களுடைய கல்வியையும் மனித வளத்தையும் வளர்ப்பது என்பதே மிக முக்கியமான விடயங்கள் தானே. நாங்கள் எவ்வளவு பிள்ளைகளை கலைத்துறையில் வளர்ப்பது? எவ்வளவு பிள்ளைகளை தொழில்நுட்ப துறையில் வளர்ப்பது? எவ்வளவு பிள்ளைகளை வர்த்தக துறையில் வளர்ப்பது? எவ்வளவு பிள்ளைகளை விஞ்ஞானம் மருத்துவ துறையில் வளர்ப்பது என்று சமூகத்திற்கு ஒரு கொள்கை இருக்கத்தானே வேண்டும். அந்த கொள்கையை யார் வகுப்பது?

சாதாரணமாக நாங்கள் தோட்டத்திற்குள் விதைகளை போடும் போது உயிர் தப்புவதற்கான விகிதாசாரம் என்பதற்கான வாய்ப்பை கண்டறிவார்கள். அதற்கேற்றவாறு தான் அங்கு விதைகள் எறியப்படும். மேலதிக விதைகளை எறிந்தால் தான் கழிவுகள் எல்லாம் போக மிகுதியாக நாங்கள் எதிர்பார்க்கின்ற விளைவு வரும். அதுபோல் தான் மனித வளமும். மனித வளத்தை நாங்கள் அபிவிருத்தி செய்வதாக தீர்மானிக்கும் போது எங்களுக்கு எவ்வளவு விற்பன்னர்கள் தொழிலாளிகள் தேவை என்பதுவும் நாங்கள் உருவாக்குகின்றவர்களில் எவ்வளவு பேர் வெளியேறுவார்கள் எவ்வளவு பேர் காணாமல் போவார்கள் என்ற விடயங்களை எல்லாம் கணிப்பிடுவது அவசியம். அந்த கணிப்பின் அடிப்படையில் தான் நாங்கள் வேலை செய்ய வேண்டும்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

# ஆசிரியர் பார்வை

## விடுதலைக்குப் பின்னும் சிறைவாசம் ஏன்?

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பிலான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் பலரும் காலத்துக்கு காலம் விடுவிக்கப்பட்டுள்ளனர். பேரறிவாளனின் விடுதலையை தொடர்ந்து இந்திய உச்ச நீதிமன்றத்தினால் இலங்கையர்களான சாந்தன், நளினி, முருகன், ராபர்ட்பயஸ், ஜெயக்குமார் ஆகியோரும் 11.11.2022 அன்று விடுதலை செய்யப்பட்டாலும் திருச்சி சிறப்புமுகாமில் மீண்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

32 ஆண்டு காலம் சிறையில் பல்வேறு கொடுமைகளையும் அனுபவித்து விடுவிக்கப்பட்ட பின்பும் தாயகம் திரும்ப முடியாமல் சிறப்பு முகாம் என்கிற சிறையில் கடந்த ஒரு வருடமாக பல்வேறு உள ரீதியான சித்திரவதைகளையும் அனுபவித்து வருகின்றனர். தமிழ்நாடு அரசும் இந்த விடயத்தில் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

77 வயதான சாந்தனின் தாயார் 32 ஆண்டு காலம் தனது மகனின் விடுதலையை வேண்டி பல்வேறு தரப்புகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடிதங்களை கையளித்துள்ளார். ஆனாலும் தற்போதும் தடுப்பு முகாம் என்கிற போர்வையில் சிறைவாழ்க்கை தொடர்கதையாகிய நிலையில், தற்போது சாந்தனுக்கு சிறுநீரக பாதிப்பு, கல்லீரல் பாதிப்பால் சென்னை மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடுமையான நோய் பாதிப்புக்குள்ளான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வந்து தங்கள் வீட்டில் வைத்து கவனிக்க வேண்டும் என்றும் வயது முதிர்ந்த காலத்திலாவது தனது மகனுடன் வாழ வழி செய்ய வேண்டும் என்றும் சாந்தனின் தாயார் உருக்கமான கோரிக்கையை இலங்கை - இந்திய அரசுகளிடம் வைத்துள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளின் அனுமதி கிடைத்ததும் சாந்தன் அனுப்பி வைக்கப்படுவார் என இந்திய அதிகாரிகள் தன்னிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ராபர்ட் பயஸ் தான் நெதர்லாந்து சென்று தனது மனைவி, சகோதரி பிள்ளைகளுடன் வாழ அனுமதிக்குமாறும், ஜெயக்குமார் தன்னை விடுவித்து சென்னையிலுள்ள தனது குடும்பத்தினருடன் வாழ அனுமதிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சட்டத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டாலும் இன்னமும் சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலை கிடைக்கவில்லை எனக் கூறி முருகன், ராபர்ட் பயஸ் ஆகியோர் சிறப்புமுகாமில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர்.

"சிறப்பு முகாம் எனப்படுவது சிறையை விட கொடுமையானதாக இருக்கிறது. இங்கு நடை பயிற்சி செய்வதற்கோ நண்பர்களை பார்ப்பதற்கோ முடியவில்லை. சிறைவாசிகளோடு பழகுவதற்கு கூட எந்தவித அனுமதியும் வழங்கப்படுவதில்லை. சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நாளில் இருந்து பல மாதங்கள் ஆரம்பத்தில் அறையிலேயே தங்க வைக்கப்பட்டதால் பல நோய்களுக்கு ஆளாகியுள்ளோம். எங்களது உடல் நலத்தை சரி செய்ய நடைபயிற்சி செய்ய அனுமதி கேட்டும் இதுவரை எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. இதனால் நோய்வாய்ப்பட்டுள்ளோம்." என திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாம் தொடர்பில் விடுவிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு தமிழ்நாடு அரசும் செவிசாய்க்க வேண்டும்.

"ஈழத்தமிழர் எங்கள் ரத்தமென சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு முழக்கமிட்ட முதல்வர் ஸ்டாலின் சிறப்பு முகாம் எனும் பெயரில் சித்திரவதைக்கூடத்தில் அடைத்து வைத்து இன்னும் எத்தனை உயிர்களைக் கொல்லப் போகிறார்? ஈழத்தமிழர்களுக்குக் குடியுரிமை வேண்டுமென ஒருபுறம் கூறிக்கொண்டே, மறுபுறம் அவர்களை மனித உரிமைகள் அற்ற நிலையில் அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்துவது எந்தவிதத்தில் நியாயம்? இதுதான் நீங்கள் தருவதாகக் கூறிய விடியல் ஆட்சியா?" என நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றால் விடுவிக்கப்பட்டாலும் இந்திய மத்திய அரசு, தமிழ்நாடு அரசு, இலங்கை அரசு, மற்றும் இதில் தொடர்புள்ள ஏனைய நாடுகளினதும் அவற்றின் வெளிநாட்டு தூதரகங்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் தான் இவர்களின் உடனடி விடுதலை சாத்தியமாகும். இவர்களின் பூரண விடுதலை விரைவாக நடக்கவேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

-செ. கிரிசாந்-

அரசியல் ஆய்வாளர் சி.அ யோதிலிங்கத்தின் பார்வையில்

# இலங்கைத் தமிழர் அரசியல் வரலாறு

## (பாகம் –03)





சி.அ யோதிலிங்கம்

இலங்கைத் தமிழர்களினுடைய அரசியல் வரலாற்றை நாங்கள் பல்வேறு காலகட்டங்களாக பார்த்து வருகின்றோம். அதில் முதலாவது காலகட்டத்தை 1833 தொடக்கம் 1921 வரை பார்த்தோம். இரண்டாவது காலகட்டத்தை 1921 தொடக்கம் 1949 வரை பார்த்தோம். முதலாவது காலகட்டத்தில் தமிழ் மக்கள் தங்களினுடைய இன அரசியலை நகர்த்தி இருக்கவில்லை. அவர்கள் அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையா ளத்தை தான் பேணினார்கள். பண்பாட்டுத் தளத்தில் தான் தமிழர்கள் என்ற அடையாளத்தை பேணினார்கள். அதனாலே அன்றைக்கு தமிழ் மக்களினுடைய தலைவர்களாக இருந்தவர்கள் தமிழ் மக்களுக்கு மட்டும் தலைவர்களாக இருக்கவில்லை முழு இலங்கைக்குமே தலைவர்களாக இருந்தார்கள். சேர்.முத்துக்குமாரசுவாமி, சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணாச்சலம் என்று சொல்லி அந்த வரலாற்றை நாங்கள் பார்த் தோம்.

இரண்டாவது காலகட்டம் என்பது இன அரசியல் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டம். அது 1949 வரை இருக்கின்றது. அந்த இரண்டாவது காலகட் டத்தில் தமிழ் மக்கள் இலங்கையின் ஒற்றையாட்சி கட்டமைப்பை ஏற்றுக் கொண்டு அதற்குள் சம வாய்ப்புகளை கோருகின்ற அரசியலை தான் முன்னெ டுத்தார்கள். ஜி.ஜி பொன்னம்பலத்தினுடைய 50 க்கு 50 கோரிக்கை அந்த வகையில் தான் எழுச்சி அடைந்தது. 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறைக்கு வருகின்றது. சோல்பரி அரசியல் யாப்பு முழுமையான




பொறுப்பாட்சியை இலங்கைக்கு வழங்குகின்றது. அந்த முழுமையான பொறுப்பாட்சி என்பதனுடாக கோல்புறுக் அரசியல் சீர்திருத்தத்தில் இருந்து கட்டி வளர்க்கப்பட்ட ஒற்றையாட்சி நிர்வாக முறை தான் தேர்தல் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. அது இயல்பாகவே பெரும்பான்மை சமூகத்திடம் ஆட்சி அதிகாரத்தை முழுமையாக ஒப்படைக்கின்றது. தமிழ் மக்கள் அந்த ஆட்சி அதிகார கட்டமைப்பில் இருந்து முழுமையாக தூக்கி வீசப்பட்ட நிலைமை ஒன்று உருவாகியது. இந்த நிலைமை தான் உண்மையிலே அடுத்த கட்டம் உருவாகியதற்கு காரணமாக இருந்தது என்று சொல்லலாம். ஆகவே இந்த நிலைமையை முழுமையாக அதற்கே உரிய தர்க்க ரீதியோடு புரிந்து கொண்டவர் தந்தை செல்வா. தந்தை செல்வா இந்த நிலைமையை மாற்றுவதற்காக மூன்று வகையான செயற்பாடுகளை முன்னெடுக்க தொடங்கினார்.

அதிலே ஒன்று, தமிழ் இன அரசியலை தமிழ் தேசிய அரசியலாக மாற்றினார். தமிழர் தாயகம் என வடக்கு கிழக்கை வரையறுத்தார். யாழ்ப்பாணமும் கொழும்பும் என்று இருந்த தமிழர் அரசியலை மாற்றி வடக்கு கிழக்கு என்ற தமிழர் தாயகத்தை வரையறுத்து அதற்கு அதிகாரத்தை கோருகின்ற சமஸ்டி கோரிக்கையை முன்வைத்தார். இது அவருடைய இரண்டாவது அணுகுமுறை. மூன்றாவது அணுகுமுறை, இவ்வளவு காலமும் சட்ட மன்றங்களில் பேசுவது கோரிக்கை மனுக்களை அனுப்புவது போன்ற அரசியல் அணுகுமுறைகளை மாற்றி மக்களை அணி திரட்டி போராட்டங்களை முன்னெடுக்க தொடங்கினார். இது அவருடைய மூன்றாவது அணுகுமுறை.

இதைவிட தமிழ் மக்களினது அக முரண்பாடுகளை நீக்க வேண்டும் என்பதற்காக அந்த அக முரண்பாடுகளுக்கு எதிரான ஒரு அரசியலையும் முன்னெடுக்க தொடங்கினார். நடைமுறையிலும் செய்ய தொடங்கினார். கோட்பாட்டு ரீதியாகவும் செய்ய தொடங்கினார். நடைமுறையில் அவ்வளவு காலமும் வன்னி மாவட்டங்கள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கிழக்கிலும் யாழ்ப்பாண தமிழர்களே தேர்தலில் போட்டியிடுகின்ற நிலைமை இருந்தது. அதனை மாற்றி அங்குள்ளவர்களையே தேர்தலில் போட்டியிட வைத்து அங்கே இருக்கின்ற யாழ்ப்பாண வம்சாவளியினரை அவர்களுக்கு ஆதரவாக நிற்கின்ற ஒரு சூழலை உருவாக்கினார்.

அதேவேளை சாதி ஒழிப்பிற்கு எதிராக நேரடியாகவே தீண்டாமை ஒழிப்பு போராட்டத்தில் இறங்குகின்ற அவற்றை முன்னெடுக்கின்ற ஒரு நிலைமையும் காணப்பட்டது. ஆகவே இந்த வித அணுகுமுறைக்கு ஊடாக அவர் தமிழ் மக்களுடைய அரசியலை இன்னொரு கட்டத்திற்கு கொண்டு சென்றார். இந்த அரசியற் காலகட்டம் கிட்டத்தட்ட 1968 ஆம் ஆண்டு ஈழத் தமிழர் இளைஞர் இயக்கம் என்கின்ற கட்சி அரசியலுக்கு அப்பாலான இளைஞர் இயக்கம் உருவாகும் வரை நிலவி இருந்தது. இந்த கட்டத்தில் ஆரம்பத்தில் தந்தை செல்வாவிற்கு பெரிய ஆதரவு வந்தது என்று சொல்லிவிட முடியாது.

அவர் தமிழ் காங்கிரஸ் கட்சியின் உப தலைவராக இருந்தவர். அதிலே இருந்து வெளியேறி 1949.12.18 அன்று தமிழரசுக் கட்சியை உருவாக்கி, அந்த தமிழரசுக் கட்சி மூலம் தான் இந்த அரசியலை முன்னெடுக்க தொடங்கினார். தமிழரசு கட்சி உருவான காலத்திலே அவருக்கு பெரிய செல்வாக்கு இருக்கவில்லை. தமிழ் காங்கிரஸ் கட்சிக்காரர் தமிழரசு கட்சிக்காரரை கூட்டமே நடத்த விடுவதில்லை. அனேக இடங்களில்

அடித்து கலைப்பார்கள். மோசமான செயற்பாடு நடந்தது என்று சொல்லலாம். ஜி.ஜி பொன னம்பலத்தினுடைய பிரமாண்டத்தோடு ஒப்பிடும் போது செல்வநாயகத்தால் நின்று பிடிக்க இய லாத நிலைமை ஏற்பட்டது.

1952 ஆம் ஆண்டு தேர்தலில் 2 தொகுதிக ளில் தான் தமிழரசுக் கட்சி வெற்றியடைந்தது. செல்வநாயகம் தனது சொந்த தொகுதியிலே அதுவும் ஐக்கிய தேசிய கட்சியிடம் தோல்வி அடைந்தார். நடேசபிள்ளை தான் வெற்றியடை ந்த நிலைமை இருந்தது. தமிழரசுக் கட்சியில் வெற்றியடைந்தவர்கள் கோப்பாயில் வன்னிய சிங்கமும், திருகோணமலையில் சிவபாலனும் தான். ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சிக்கு தோல்வி நிலை தான் ஏற்பட்டது என்று சொல்லலாம். ஆனால் மறுபுறத்தில், அரசினுடைய செயற் பாடுகள் தமிழரசுக் கட்சி செயற்படுவதற்கும் மேலெழுவதற்குமான சூழலை உருவாக்கின. அரசு என்ன செய்தது என்றால், தன்னிடம் இந்த அதிகாரம் வந்த உடனே அரசு என்கின்ற நிறுவனத்தையே சிங்கள மயமாக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க தொடங்கி விட் டது.

அரசை சிங்கள மயமாக்குவதன் ஊடாக அரச நிறுவனங்கள் அனைத்தையும் சிங்கள மயமாக்கும் செயற்பாட்டை அரசு தொடங்கி ற்று. அது கிட்டத்தட்ட 3 தளங்களில் நடந் தது. ஒன்று குறியீட்டு தளத்தில் நடந்தது. குறியீட்டு தளம் தேசியக்கொடி பிரச்சனையில் வருகின்றது. தேசியக்கொடி உருவாக்கம் வரும் போது அந்த தேசியக்கொடி குழுவில் இரண்டு தமிழர்கள் இருந்தார்கள். ஜி. ஜி பொன்னம் பலம் இருந்தார் மற்றது நடேசன் இருந்தார். தேசியக் கொடி உருவாக்கம் தொடர்பாக தமிழ் மக்களின் நிலைப்பாட்டில் நின்று கருத் துகளை நடேசன் ஓரளவு சொன்னார். ஜி. ஜி பொன்னம்பலம் பெரிதாக சொன்னதாக சொல்லி விட முடியாது. அவர் அந்த நேரம் அமைச்ச ராக இருந்தார். இதிலே வாளேந்திய சிங்கம் இலங்கையின் இறைமையை குறிக்கிறது என்ற நிலை வந்த போது, நடேசன் தமிழ் முஸ் லீம்களை குறிக்கின்ற அந்த செம்மஞ்சள் கோட் டையும், பச்சை கோட்டையும் வாளேந்திய சிங் கத்திற்குள் போட சொல்லி சொன்னார். அப்படி யென்றால் இறைமைக்குள் தமிழ், முஸ்லீம் மக்கள் இருக்கிறார்கள் என்று அர்த்தம் வரும். சிங்களவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் அதை வெளியில் போட்டது மட்டும் அல்லாமல் செம்மஞ்சள் கோட்டையும், பச்சை கோட்டையும் வாளேந்திய சிங்கம் எச்சரிக்கை செய்வது போன்ற தோற்றத்தை தான் உருவாக் கினார்கள். இதை கடுமையாக எதிர்த்து நடேசன் தேசியக்கொடி குழுவில் இருந்தே வெளியேறி னார். தன்னுடைய அறிக்கையை பகிரங்கமாக வெளியிட்டார். இதேவேளை தமிழரசுக் கட்சி தேசியக்கொடிக்கு எதிராக சங்கிலி மன்ன னினுடைய நந்திக்கொடியை மகிழுந்துகளில் ஏற்றிக்கொண்டு தேசியக்கொடிக்கு எதிரான ஒரு பிரச்சாரத்தை செய்தது.

சிங்கள மயமாக்கலில் இரண்டாவது அணுகுமுறை குடியேற்றங்கள். தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் சுதந்திரத்திற்கு முற்பட்டே தோன்றி விட்டது. முழுமையான ஆட்சி அதிகாரம் வந்த உடனே அதை அவர்கள் செய்ய தொடங்கி விட்டார்கள். சுதந்திரத்திற்கு முன்னரே கல் லோயா திட்டம் உருவாக்கப்பட்டது. அது உரு வாக்கப்பட்டாலும் நடைமுறைக்கு வந்தது சுத ந்திரத்திற்கு பிறகு தான். அதாவது, 1944 ஆம் ஆண்டு கல்லோயா திட்டம் உருவாகியது ஆனால் மக்கள் வந்து குடியேறியதெல்லாம் சுதந்திரத்திற்கு பிறகு தான். சுதந்திர அரசு அதற்கான ஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்து கொடுத்தது. உண்மையில் அப்பொழுது கிழக்கில் ஒரு சிங்கள தேர்தல் தொகுதி கூட இருக்கவில்லை. 1959 ஆம் ஆண்டு தேர் தல் தொகுதி மாற்றம் செய்த போது தான் அம்பாறையில் இருக்கின்ற சிங்கள மக்க ளுக்காக அம்பாறை தேர்தல் தொகுதி உரு வாக்கப்பட்டது. அதற்கு பிறகு தான் சிங்கள பிரதிநிதியே கிழக்கில் வருகின்றார். அதற்கு முன்னர் கிழக்கில் சிங்கள பிரதிநிதி வரவில்லை.

குடியேற்ற பகுதியை மையமாக வைத்து மட்டக்களப்பு தெற்கு பிரதேசத்தை பிரித்து அம்பாறை மாவட்டம் உருவாக்கப்படுகின்றது. உண்மையில் அம்பாறை மாவட்டத்திற்கு தலை நகராக அம்பாறை இருந்திருக்க முடியாது. கல்முனை தான் இருந்திருக்க வேண்டும். அன்றை க்கு அனைத்து நிர்வாக செயற்பாடுகளும் கல் முனையை மையமாக வைத்து தான் இருந்

> **திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவரை குடியேற்றுவதில் மிக கவனமாக இருந்தார்கள். ஆகவே திருகோணமலை மாவட்டத்தில் உலகத்திலே என்னென்ன குடியேற்ற முறைகள் இருக்கிறதோ அவ்வளவு முறைகளையும் பரீட்சித்து பார்த்தார்கள். இதற்குள்ளால் திருகோணமலை மாவட்டத்தின் பெரும் பகுதி நிலத்தை சிங்களவர்கள் கைப்பற்றிய நிலைமை காணப்பட்டது.**

தன. சிங்கள குடியேற்ற பிரதேசத்தை தலை நகராக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் அம்பாறையை தலைநகரமாக்கினார்கள். பட்டிப்பளை ஆற்றை மறித்து சேனநாயக்க சமுத்திரம் உருவாக்கப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் 44 குடியேற்ற கிராமங்கள் உருவாக்கப்பட்டன. அந்த 44 குடியேற்ற கிராமங்களில் 38 கிராமங்கள் சிங்களவருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. 6 கிராமங்கள் தான் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டன. அது வளம் இல்லாத பிரதேசமாக இருந்தது, அல்லது நீர் போக்குவரத்தில் தடங்கல் வரக்கூடிய பிரதேசமாக இருந்தது. பிறகு வந்த கலவரங்களில் அந்த 6 கிராமங்களில் இருந்தவர்களும் விட்டுவிட்டு ஓடிய நிலைமை தான் காணப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறு குடியேற்றங்களை உருவாக்கினாலும் வடக்கு கிழக்கை இணைக்கின்ற மையமான மாவட்டமாக திருகோணமலை மாவட்டம் தான் இருந்தது. ஆகவே சுதந்திரத்திற்கு பிறகு திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவரை குடியேற்றுவதில் அவர்கள் மிக கவனமாக இருந்தார்கள். ஆகவே திருகோணமலை மாவட்டத்தில் உலகத்திலே என்னென்ன குடியேற்ற முறைகள் இருக்கிறதோ அவ்வளவு முறைகளையும் அங்கு பரீட்சித்து பார்த்தார்கள். திட்டமிட்ட விவசாய குடியேற்றம், சட்ட விரோத விவசாய குடியேற்றம், கைத்தொழில் குடியேற்றம், வியாபார குடியேற்றம், புனித பிரதேச குடியேற்றம், முப்படை பண்ணைகளுக்கான குடியேற்றம் என்று எல்லா வகையான குடியேற்ற முறைகளும் அங்கு பரீட்சித்து பார்க்கப்பட்டன. திட்டமிட்ட விவசாய குடியேற்றம் சாதாரணமானதாக இருக்கவில்லை. திருகோணமலை மாவட்டத்தை வில் போல வளைத்து அந்த குடியேற்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டன. திருகோணமலைக்கு வடக்கிலும் வந்தது, மேற்கிலும் வந்தது, தெற்கிலும் வந்தது. அதிலே முதலாவது அல்லைத் திட்டம், கந்தளாய் திட்டம், அதற்கு பிறகு மொறவெவ திட்டம், அதற்கு பிறகு மகாவலி அபிவிருத்தி திட்டம், இறுதியாக பதவியா திட்டம். இதற்குள்ளால் திருகோணமலை மாவட்டத்தின் பெரும் பகுதி நிலத்தை சிங்களவர்கள் கைப்பற்றிய நிலைமை காணப்பட்டது.

பிறகு அந்த சிங்கள குடியேற்றங்களை அரசியல் ரீதியாக பலப்படுத்த வேண்டும் என்பதற்காக 1977 ஆம் ஆண்டு சேருவில தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. வாள் போல இருப்பது தான் சேருவில தேர்தல் தொகுதி. சிங்கள குடியேற்றங்கள் எல்லாவற்றையும் இணைத்து அந்த சேருவில தேர்தல் தொகுதி உருவாக்கப்படுகின்றது. சேருவில தொகுதி உருவாகுவதற்கு முன்னர் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினரும் வரக் கூடியதாக தான் இருந்தது. இரண்டு தொகுதி தான் இருந்தது. ஒன்று திருகோணமலை தொகுதி, மற்றையது மூதூர் தொகுதி.

1970 ஆம் ஆண்டு தொடக்கம் மூதூர் தொகுதியை இரட்டை அங்கத்துவ தொகுதியாக மாற்றி இருந்தார்கள். ஆகவே மூதூர் இரட்டை அங்கத்துவ தொகுதி. திருகோணமலை தேர்தல் தொகுதியில் இருந்து ஒரு தமிழர் தெரிவு செய்யப்படுவார். மூதூரில் ஒரு தமிழரும், ஒரு முஸ்லீமும் தெரிவு செய்யப்படுவார்கள். ஆகவே இரண்டு தமிழ் நபர்களும் ஒரு முஸ்லீம் நபரும் தெரிவு செய்யப்படுகின்ற நிலைமை தான் இருந்து வந்தது.

சேருவில தேர்தல் தொகுதி மூதூர் தேர்தல் தொகுதியை பிரித்து தான் பிரதானமாக உருவாக்கப்பட்டது. அவ்வாறு வந்ததன் பிறகு அங்கு ஒரு தமிழ் நபரும், ஒரு முஸ்லீம் நபரும், ஒரு சிங்கள நபரும் வரக்கூடிய நிலைமை தான் உருவாகியது. இந்த தேர்தல் மாவட்டம் வந்ததன் பிறகு, இன்றைக்கு, முதலாம் நிலையில் முஸ் லீம்கள் இருக்கிறார்கள், இரண்டாம் நிலையில் சிங்களவர்கள் இருக்கிறார்கள், மூன்றாம் நிலை யில் தான் தமிழர்கள் இருக்கின்ற நிலைமை ஒன்று வந்திருக்கின்றது. ஆகவே தமிழ் பிரதி நிதி ஒருவர் தான் தெரிவு செய்யப்படக் கூடிய நிலைமை ஒன்று அங்கு உருவாகி இருக்கின்றது. தமிழ் கட்சிகளிடையே போட்டிகள் வரும் பொழுது அதுவும் பறிபோகக் கூடிய சூழ்நிலை தான் இன்றைக்கு அங்கு இருக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் அவர்கள் குடியேற்றம் என்பதில் மிக கவனமாக இருந் தார்கள். இன்றைக்கு திருகோணமலை மாவட் டம் முற்றுப் பெற்றதால் தான் முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கி நகர்கிறார்கள். முல்லை த்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற மக்கள் திரு கோணமலை மாவட்டத்தின் குடியேற்றங்களை அனுபவமாக கொண்டு எதிர்ப்பு நடவடிக்கைக ளில் ஈடுபட்டதால் அது கொஞ்சம் கட்டுப்பாட் டுக்குள் இருக்கின்றது. மக்கள் எதிர்ப்பில் ஈடு பட்டதால் அரசாங்கத்துக்கு குடியேற்றங்களை செய்வதற்கு தடங்கலாக இருக்கின்றது. இதே முயற்சிகளையும் எதிர்ப்புகளையும் திருகோ ணமலை மாவட்டத்திலும் செய்திருந்தால் திரு கோணமலை மாவட்டத்தின் குடியேற்றங்களை தடுத்திருக்க கூடிய வாய்ப்பு வந்திருக்கும். ஆனால் அன்றைக்கு இருந்த அரசியல் தலைவர் கள் அதிலே பெரிய கவனம் செலுத்தவில்லை.

தமிழரசுக் கட்சி மொழி போராட்டத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தை இந்த குடியேற்ற பிரச்சனைகளுக்கு கொடுக்கவில்லை. திருகோ ணமலையில் பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தவர்கள் கூட அதில் பெரிய கவனம் செலு த்தவில்லை. மூதூரில் பாராளுமன்ற உறுப்பி னராக இருந்த தங்கத்துரை கொஞ்சம் கவனம் செலுத்தினார் என்பது உண்மை தான். ஆனால் தாமதமாக தான் கவனம் செலுத்தினார். அவர் நிலப் பங்கீடு தொடர்பாக காணி கச்சேரி நடக் கின்ற போது நேரடியாகவே அந்த இடத்திற்கு சென்றார். தமிழ் மக்களுக்கும் அதனை வழங் குவதற்கான அழுத்தங்களை கொடுக்க ஆரம் பித்தார். தங்கத்துரையினுடைய தம்பி தான் குமாரதுரை. அவர் அரச மரங்கள் இருக்கிறதா என்று பார்த்து எல்லா அரச மரங்களையும் தறி க்க முற்பட்டார். ஏனென்றால் அரச மரம் நின் றால் அந்த இடத்தில் புத்தர் சிலை வந்து விடும் என்பதற்காக. இதனால் அவர் நீண்ட காலம் தலைமறைவாக இருக்க வேண்டிய நிலைமை ஒன்று ஏற்பட்டது. ஆகவே ஏதோ ஒரு வகையிலே ஒரு எதிர்ப்பு நடவடிக்கையை திரு கோணமலையில் அதுவும் மூதூர் பகுதியில் தங்கத்துரை சார்பானவர்கள் செய்தார்கள் என் பது உண்மை தான். ஆனால் அது காலம் தாழ்த்தி வந்ததால் அவர்களால் பெரிதாக தடு க்க கூடிய நிலைமை இருக்கவில்லை.

இது ஒரு பக்கத்தில் திருகோணமலை மாவட்டத்தில் நடந்து கொண்டு இருக்க, வன்னி மாவட்டத்தை பொறுத்தவரையில் எல்லைப் புற ங்களில் குடியேற்றுகின்ற செயற்பாடுகள் இந்த மூன்றாவது கட்டத்தில் பெரிதாக உருவாக தொடங்கி கொண்டு இருக்கின்றன. குறிப்பாக வவுனியா தெற்கு பிரதேசங்களில் பாவற்குள குடியேற்ற திட்டம், வவுனியா தெற்கு சிங்கள குடியேற்றங்கள் எல்லாம் அதற்குள்ளால் தான் வருகின்றன. மற்றது சட்ட விரோதமாக மடு வீதியின் இரண்டு பக்கங்களிலும் இடம்பெற்று இருக்கின்ற குடியேற்றங்கள். மன்னார் கொண் டைச்சி போன்ற இடங்களில் முந்திரிகை செய்கை நோக்கிலும் குடியேற்றங்கள் வரத் தொடங்கி விட்டன. இந்த பக்கம் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் (கென் பாம், டொலர் பாம்) குற்றவியல் சிறைக்கைதி களை கொண்டு வந்து குடியேற்றுகின்ற ஒரு நிலைமை ஒன்றும் உருவாகி இருக்கின்றது. அதையும் அவர்கள் பிற்காலத்தில் செய்ய தொடங்கி விட்டார்கள். ஆகவே இந்த கட்டத்தி லேயே வன்னியிலும் அவர்கள் குடியேற்ற முயற் சிகளை தொடங்கி இருக்கிறார்கள். பாவற் குள குடியேற்ற திட்டம் 1964 ஆம் ஆண்டு உருவாகியது. மைத்திரிபால சேனநாயக்கா

காணி அமைச்சராக இருக்கும் போது அது உருவாக்கப்பட்டது என்று நான் நினைக்கிறேன். அதில் 6 பகுதிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 2/3 பகுதிகள் சிங்களவருக்கு பகிர்ந்து கொடுக் கப்பட்டுள்ள நிலைமை இருக்கின்றது. இன் றைக்கு வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவு என்று ஒரு தனி பிரிவே இரு க்கக் கூடிய சூழல் ஒன்று உருவாகி இருக்கி ன்றது. இது இன்னொரு செயற்பாடு. அதாவது ஒரு தேசத்தை தாங்கியிருப்பவை நிலம், பொருளாதாரம், மொழி, கலாசாரம் எனும் போது அவற்றுள் நிலத்தை அழிப்பதான ஒரு செயற்பாடு.

மூன்றாவது செயற்பாடு, மொழி சம்பந் தமான விடயம். இதில் இலங்கை அரச அதிகார கட்டமைப்பை சிங்கள மயமாக்க வேண்டும் என் பதற்காக சிங்கள அரச கரும மொழி சட்டம் கொண்டு வரப்பட்டது. அது 1956 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வருகின்றது. இதுவும் சிங் கள மயமாக்கலில் பாரிய பாத்திரத்தை வகித் தது என்று நாங்கள் சொல்லலாம். சோல்பரி யாப்பில் சிறுபான்மையினோர் காப்பீடுகளாக 29 வது பிரிவு தொடக்கம் பல விடயங்களை சேர் த்திருந்தாலும் கூட அது எதுவுமே நடைமுறை யில் வெற்றியளிக்காத சூழ்நிலையை தான் நாங்கள் வரலாற்று ரீதியாக பார்க்க கூடியதாக இருக்கின்றது. அதிலிருந்த 24 வது பிரிவு, செனட் சபை, நியமன அங்கத்தவர் என்பன அரசியல் ரீதியாக தமிழர்களின் பிரச்சனைகளை பேசு பொருளாக்குவதற்கு உதவும் என்பதற்காக 1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பை உருவாக்கிய போது அது எல்லாவற்றையும் இல்லாமல் செய்தார்கள். அதிலே அவர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள் என்றே சொல்லலாம்.

இந்த சிங்கள மயமாக்கல் சூழல் தமிழரசு கட்சி வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கியது. தமிழரசு கட்சியும் இது தொடர் பான போராட்டங்களை நடாத்த தொடங்கி யது. தமிழரசு கட்சியின் பொற்காலம் என்பது 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1961 வரை 5 வருடங்கள் தான். 5 வருடங்கள் தான் தமிழ ரசுக் கட்சி ஒரு போராட்ட இயக்கமாக இருந் ததை பார்க்கலாம். 1956 ஆம் ஆண்டு காலி முகத்திடல் சத்தியாக்கிரக போராட்டம் நடந் தது. அந்த ஆண்டின் கடைசிப் பகுதியில் திருமலை யாத்திரை நடந்தது. அதற்கு பிறகு சிங்கள எதிர்ப்பு போராட்டங்கள் நடந்தது 1961 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கினுடைய அனைத்து கச்சேரிகளுக்கும் முன்னால் மிகப் பெரிய சத்தியாக்கிரக போராட்டம் நடந்தது. பண்டா - செல்வா ஒப்பந்தம் 1957 ஆம் ஆண்டு வருகின்றது, டட்லி - செல்வா ஒப்பந்தம் 1965 ஆம் ஆண்டு வருகின்றது. ஆனால் அது இரண்டும் பெரிய வெற்றியை கொடுக்கவில்லை. இந்த நிலையில் தான் 1965 ஆம் ஆண்டு இவர்கள் ஐக்கிய தேசிய கட்சியில் அரசாங்கத்தில் பங் காளர்களாக சேர்ந்து கொண்டார்கள். மு. திருச் செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக பொறுப் பேற்றார்.

இந்த நிலைமை இளைஞர்கள் மத்தியில் ஒரு அதிருப்தியை உருவாக்கியது. அவர்கள் மூன்று முடிவுகளுக்கு வருகிறார்கள். ஒன்று இந்த இலங்கை என்ற அரச கட்டமைப்புக்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு இல்லை. ஆகவே நாங் கள் ஒரு தனி நாட்டு கோரிக்கையை முன் வைக்க வேண்டும். இரண்டாவது, கட்சி அரசி யல் தேர்தல் அரசியலால் தமிழ் மக்களினு டைய தேசிய போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. ஆகவே இதற்கு வெளியில் தமிழ் மக்களுக்கான ஒரு தேசிய அரசியல் இயக் கத்தை உருவாக்க வேண்டும். அகிம்சை போரா ட்டங்கள் எல்லாம் சரி வராது, ஆயுத போராட் டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த மூன்று நிலைப்பாடுகளுக்கும் வருகின்றார்கள்.

இந்த நிலைப்பாடு காரணமாக 1968 ஆம் ஆண்டு ஈழத்தமிழர் இளைஞர் இயக்கம் என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் பிறகு தான் தமிழ் அரசியலில் நான்காவது காலகட்டம் உருவாகியது என்று சொல்லிக் கொள்ளலாம்.

# எழுச்சியை ஏற்படுத்தக் கூடிய சமூக அரசியல் கட்டமைப்பே தேவை



கலாநிதி சிதம்பரநாதன்

இன்று ஈழத்தமிழர் மத்தியில் தலைமை பற்றிய ஒரு தேடல் ஏற்பட்டிருக்கிறது. அதாவது தமக்கு நல்லவரும் வல்லவருமான ஒரு தலைமை தேவை என்ற ஒரு தேடல் ஏற்பட்டிருக்கின்றது. 2009 க்கு பிறகு செயல் முனைப்பற்று இருந்த சமூகம், தங்களுக்கு ஒரு தலைமை தேவை என்று தேடுகின்றது. அந்தவகையில் தமிழர்களுடைய உரிமை போராட்டம் ஒரு செயல் முனைப்பான நிலைக்கு வந்துள்ள மாதிரியான ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

இந்த இனம் சிதைந்து போகின்ற போது, இந்த இனத்தில் பல சீரழிவுகள் ஏற்பட்டு, இளைஞர்கள் போதைவஸ்து பண்பாட்டு சீரழிவுகளில் ஈடுபட்டு ஒரு அழிவின் விளிம்புக்கு வந்துள்ள ஒரு நிலையில் அவர்கள் போராட்ட கால கட்டத்தை நினைத்து பார்க்கிறார்கள். “அந்த காலம் ஒரு பொற்காலம்” என்று பல இடங்களில் மக்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். பல கஷ்டங்களை அனுபவித்தாலும் தாங்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்த காலம் அது என்று அவர்கள் கூறுகின்றார்கள். தங்களை பொறுப்பெடுப்பதற்கு ஒரு தலைமை இருந்தது. நேர்மையான சமூகத்திற்கு தேவையான ஒரு பயனை தரக் கூடிய நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்கிய வீரர்கள் அந்த சமூகத்தில் இருந்ததை அந்த சமூகம் நினைத்து பார்க்கின்றது.

அந்தவகையில் தான் இந்த துவாரகா பற்றி வருகின்ற விவாதங்களையும் நாங்கள் நினைத்து பார்க்க வேண்டும். அவர்கள் ஒரு தலைமையை தேடுகின்றார்கள். ஏனென்றால் 2009 க்கு பின்னர் அரசியல் தலைமைகள் என்று வந்தவர்களால் நாங்கள் ஏமாற்றுப்பட்டு விட்டோம். அவர்கள் நேர்மையற்றவர்களாக இருக்கின்றார்கள். அவர்களால் 13, 14 வருடத்தில் எதுவும் எங்கள் சமூகத்தில் விளைய வில்லை என்ற நிலையில் தான் அவர்கள் இந்த தலைமையை தேடுகின்ற ஒரு நிலைக்கு வந்திருக்கிறார்கள். இதை நாங்கள் நினைத்து பார்க்க வேண்டும். உண்மையில் இந்த தலைமையை தேடுகின்ற போது இரண்டு விடயங்கள் அங்கு முதன்மைப்பட்டு வருகின்றன.

ஒன்று நேர்மையான தலைமை, நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்குகின்ற ஒரு தலைமை. இரண்டாவது, செயல்முறையும் வழிமுறையும். ஒரு நேர்மையான தலைமை. ஆயதப்போராட்டத்தின் பின்னர் அந்த வழியை மாற்றிக் கொண்டு அற வழியில் போராடி எங்கள் உரிமைகளை பெறும் தலைமை. அந்த ஓர் எண்ணப்பாடு நிறைய தமிழ் மக்கள் மத்தியில் அரும்பு விட தொடங்குகின்றது. இது ஏனென்றால் 2009 க்கு பிறகு நடந்தது என்ன என்பதை யோசித்து பார்க்கும் பொழுது புரியும். 2009 இல் ஒரு பெரிய இனப்படுகொலை நடக்கின்றது. தமிழர்களின் பாதுகாப்பு அரண் அடித்து உடைக்கப்படுகின்றது.

ஆனால் அதற்கு முன்னர் இருந்த ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் ‘பொங்கு தமிழ்’. அந்த வழியிலே நாங்கள் தொடர்ந்து சென்றிருக்க முடியும். தமது பாதுகாப்பு அரண் உடைக்கப்பட்டதனால் அதர்ச்சிக்குள்ளான மக்களை ஆற்றுப்படுத்தி ஒரு வலுப்பெற வைத்து நாங்கள் தொடர்ச்சியாக முன்னேறி சென்றிருக்க முடியும். அதனை எமது தலைமைகள் செய்யவில்லை. ஆனால் நடந்தது என்னவென்று பார்ப்போம்.

அந்த 2009 இனப்படுகொலையை சர்வதேச ஆளும் வர்க்கங்களும் சிங்கள ஆளும் வர்க்கங்களும் சேர்ந்து நடத்துகின்றன. இந்த தமிழ் சமூகம் வேர்கள் நீண்டு செல்கின்ற ஒரு பாரம்பரிய இனம். அந்த இனம் மீண்டும் ஒன்று திரண்டு எழும். எனவே அவர்களது இனம் ஒன்று திரண்டு எழக் கூடாது என்பது சர்வதேச ஆளும் வர்க்கங்களின் எண்ணமாக இருக்கின்றது. இதில் ஒரு விடயத்தை நாங்கள் நினைத்து பார்க்க வேண்டும். சர்வதேச ஆளும் வர்க்கத்தை சேர்ந்த ஒரு பிரதிநிதி 2009 க்கு பிறகு எங்களுக்கு கூறியது என்னவென்றால், ‘இனி நீங்கள் தேவையில்லை, சம்பந்தர் போன்ற ஆட்களே எங்களுக்கு தேவை’.

அதாவது பழையதின் தொடர்ச்சி இனி வேண்டாம். இனி ஒரு புதிய முறையிலே நாங்கள் போகப் போகின்றோம். இந்த இனம் மீண்டும் எழாத முறையிலே நாங்கள் போகப் போகின்றோம், அதற்கு சம்பந்தர் எங்களுக்கு தேவை என்று அவர்கள் கூறுகின்றார்கள். சம்பந்தர் வந்த உடனே என்ன செய்கிறார் என்றால் பாராளுமன்றத்திலே மகிந்த ராஜபக்சவிற்கு அந்த இனப்படுகொலையை நிகழ்த்தியதற்கு நன்றி தெரிவிக்கின்றார். நன்றி தெரிவிப்பது மட்டுமல்ல விடுதலைப்புலிகள் சர்வாதிகாரமாக இருந்ததால் அவர்களாகவே அழிந்தார்கள் என்று கூறியும் ஒரு சான்றிதழ் கொடுக்கிறார். அந்த தலைமை பற்றிய எண்ணத்தை கைவிடுங்கள் என்று தமிழ் மக்களுக்கு சொல்கிறார். மறுபக்கம் சிறிலங்காவிற்கு உரிய சிங்க கொடியை அவர் உயர்த்தி பிடிக்கின்றார்.

இதில் இரண்டும் வருகின்றது. அதாவது தலைமையும் வருகிறது, வழிமுறையும் வருகிறது. அந்த தலைமை வேண்டாம் இனி தாங்கள் தான் இதை நடத்த போகின்றோம் என்பதை அவர் கூறுகின்றார். இரண்டாவது, வழிமுறை என்னவென்றால், ஒரு சிங்கள பேரினத் தன்மைக்குள் நாங்கள் அடங்க போகின்றோம், அதை தான் நாங்கள் தூக்கி பிடிக்க போகின்றோம், தமிழர்கள் இங்கு சிறுபான்மையினமாக வாழ வேண்டும் என்பது. அதற்கு பிறகு பல அலுவல்கள் நடக்கின்றன. அதற்குரியவர்களை கொண்டு வருகின்றார்கள். இந்த இனம் படிப்படியாக சீரழிகின்றது. 10, 12 வருடத்தில் எதுவுமே நடக்கவில்லை. இந்த இனம் அழிவின் விளிம்பில் வந்து நிற்கிறது.

அந்த விளிம்பில் நிற்கும் பொழுது தான் இந்த சிந்தனை வருகின்றது. அதாவது, அந்த முந்திய தலைமையை தேடுதல், தாங்கள்

> **பண்பாட்டை மாற்றுதல் என்றால் சமூகத்தின் வாழ்க்கை முறையை மாற்றுதல். அவ்வாறாக மாற்றியமைக்கின்ற போது புதிய புதிய தலைவர்கள் புதிய புதிய சமூக செயற்பாட்டாளர்கள் உருவாகுவார்கள். அவர்கள் மக்கள் மத்தியில் செயற்படுகின்ற போது ஒரு புதிய சமூக அரசியல் இயக்கம் உருவாகும்.**

நிமிர்ந்து வாழ்ந்த அந்த காலத்தை தேடுதல். இந்த நிலைகள் இன்று இந்த சமூகத்தில் ஏற்பட்டு இருக்கின்றன. துவாரகா இருக்கிறாரா இல்லையா என்ற இரண்டுக்கும் நாங்கள் போக முடியாது. ஆனால் நாங்கள் இந்த நேரத்தில் தீவிரமாக எடுக்க வேண்டிய ஒரு நிலைப்பாடு என்னவென்றால் இதற்கு பின்னால் உள்ள தேடுதலை நாங்கள் சாதகமாக எடுக்க வேண்டும். கட்டுடைத்து நாங்கள் பார்க்க வேண்டும்.

அதாவது மக்களுக்கு ஒரு நேர்மையான தலைமை தேவை. ஒரு வல்லமையான தலைமை தேவை. தங்களுக்கு பயன்களை தரக் கூடிய செயல்களை செய்யக் கூடிய ஒரு தலைமை தேவை. இன்றைக்கு இருக்கின்ற ஒரே ஒரு வழி என்னவென்றால், ஆரம்பத்தில் தந்தை செல்வா தலைமையில் நடந்த அறப் போராட்டம். அதன் பின்பு இளைஞர்களின் வழிநடத்தலில் நடந்த ஆயுதப் போராட்டம். இவ்வாறாக 60 வருடங்களுக்கு மேற்பட்ட ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அந்த மரபில் ஊறி திளைத்த, அதேவேளை வல்லவர்களாகவும், அனுபவம் உள்ளவர்களாகவும் இருப்பவர்களை இனங்கண்டு அவ்வாறானவர்களை கொண்டு நாங்கள் ஒரு சமூக அரசியற் கட்டமைப்பை இன்று உருவாக்க வேண்டும்.

உண்மையில் ஒரு இயங்கு நிலையில் ஒரு உரிமை போராட்ட வழிமுறையில் தான் ஒரு சமூகத்தின் தலைமை உருவாக வேண்டும். இந்த மக்கள் அந்த பொறுப்பை எடுக்க வேண்டும். அந்த போராட்ட பாரம்பரியத்தில் ஊறி வந்தவர்கள் சமூகத்திற்கு சேவை செய்ய அர்ப்பணிப்பு உள்ளவர்கள் அவ்வாறானவர்களை இனங்கண்டு இந்த சமூகத்தில் ஒரு அரசியல் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அந்த கட்டமைப்பு இந்த மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை ஏற்படுத்துகின்ற வேலையை செய்ய வேண்டும். அதை தான் நாங்கள் பண்பாட்டு வேலை என்று சொல்கிறோம்.

2009 க்கு பிறகு இந்த அரசியல்வாதிகளின் நிலை காரணமாக இந்த சமூகம் சீரழிந்து இருக்கிறது. பண்பாட்டை மாற்றுதல் என்றால் சமூகத்தின் வாழ்க்கை முறையை மாற்றுதல். அவ்வாறாக மாற்றியமைக்கின்ற போது புதிய புதிய தலைவர்கள் புதிய புதிய சமூக செயற்பாட்டாளர்கள் உருவாகுவார்கள். அவர்கள் மக்கள் மத்தியில் செயற்படுகின்ற போது ஒரு புதிய சமூக அரசியல் இயக்கம் உருவாகும். இந்த இடத்திலே நான் இன்னொரு விடயத்திற்கு வருகிறேன். இன்று கட்சிகளாக இருக்கின்றனர். பல கருத்துருவாக்கிகள், பத்திரிகைகள் எல்லாம் திருப்பி திருப்பி கட்சிகளின் ஒற்றுமை பற்றி சொல்கின்றனர். கட்சிகளின் ஒற்றுமை என்பது நடக்காது.

இரண்டு எண்ணக்கருக்களை நான் இதில் சொல்கிறேன். ஒன்று கட்சி, மற்றது இயக்கம். கட்சிகள் என்பது பாராளுமன்ற பதவிகளுக்கு தங்களுடைய ஆட்களை அனுப்புவதற்காக போட்டி போடுகின்ற அமைப்புகள். அவர்களுக்கு பாராளுமன்ற பதவி தான் முக்கியம். எனவே அவர்களிடம் ஒற்றுமை வருவது என்பது நடக்க போவதில்லை. அடுத்தது இயக்கம் என்பது, மக்களுடைய இன்றைய நிலையை மாற்றியமைப்பதற்கு செயல்படுகின்ற ஒரு அமைப்பை தான் நாங்கள் இயக்கம் என்று சொல்கிறோம். மக்களுடைய கஷ்டமான, ஒடுக்கப்பட்ட நிலைமையை நல்ல விடுதலை நிலைமையாக மாற்றுவது. அதற்கு தொடர்ச்சியாக செயல்படுகின்ற அமைப்பை தான் நாங்கள் இயக்கம் என்று சொல்கின்றோம். இந்த கட்சிக்கும் இயக்கத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை பார்க்க வேண்டும்.

கட்சி என்பது காலாவதியாகிப் போன ஒன்று. நாங்கள் ஒரு சமூக அரசியல் இயக்கத்தை மக்கள் இயக்கத்தை உருவாக்குகின்ற ஒரு வேலையில் ஈடுபட வேண்டும். அவ்வாறு ஈடுபட்டு அது மக்கள் மத்தியில் செயற்படுகின்ற போது மக்கள் திரளாவது நடக்கும். மக்கள் உண்மையில் திரளாக தான் வாழ்ந்தார்கள். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக தான் வாழ்ந்தார்கள். போராட்ட காலகட்டத்திலே கூட மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தார்கள். பதுங்கு குழிகளை வெட்டுவதிலும் கூட்டம் கூட்டமாக தான் அவற்றை வெட்டினார்கள்.

ஆனால் அதற்கு பிறகு இந்த நச்சு உலகு, இந்த வியாபார உலகு, இந்த நுகர்வு உலகு மக்களை பிரிக்கின்றது. எனவே மக்கள் ஆழ்ந்த மனதில் தாங்கள் ஒன்று கூட வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது. இன்றைக்கு நாங்கள் பார்த்தோமானால் வீரவணக்கத்தில் மக்கள் ஒன்று திரள்கிறார்கள். அது அவர்களுடைய அடி மனதிலே உள்ள விடயம். ஆனால் கட்சிகள் கூப்பிட்டால் போக மாட்டார்கள். இந்த வீரவணக்க நிகழ்வுகளும் கட்சிகள் நடத்தாமல் ஒரு இயக்கம் நடத்தியிருந்தால் அதன் பரிமாணம் இன்னொன்றாக மாறி இருக்கும். இது வெறுமனே அந்த வீரர்களை நினைப்பது மட்டுமல்ல, நாங்கள் எதிர்காலத்தில் என்ன செய்ய போகிறோம் எந்த வழியில் செல்ல போகிறோம் என்ற உறுதியை எடுக்கின்ற இடமாகவும் அது மாறி இருக்கும்.

எனவே நான் சொல்ல வருவது என்னவென்றால் ஒரு அர்ப்பணிப்பு மிக்க தலைமையும் சரியான வழிமுறையும் இருக்கும் என்றால் மக்கள் திரளாவது மிக இலகுவாக நடக்க கூடியது. அதை நாங்கள் கடந்த காலங்களிலும் கண்டோம். பொங்கு தமிழில் கண்டோம். அண்மையில் சொன்னார்கள் இந்தியாவில் இருந்து வந்த இசைக் கச்சேரிக்கு தான் சேர்கிறார்கள் என்று. ஆனால் பார்த்தால் வீரவணக்கத்தில் பெருமளவில் சேர்கின்றார்கள். எனவே மக்களை வழிநடத்துபவர்கள் தான் பிழை விடுகிறார்களே தவிர, மக்கள் தாங்கள் ஒன்று திரள்வதற்கு ஆசையாக தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வழி தெரியவில்லை. ஆனால் இதிலே மக்கள் ஒரு பொறுப்பை எடுக்க வேண்டும். என்னவென்றால் சரியான தலைமையை தேடுகின்ற ஒரு பொறுப்பை அவர்கள் எடுக்க வேண்டிய அவசியம் உண்டு.

எனவே நான் கேட்டு கொள்கின்ற ஒரு விடயம் என்னவென்றால் இந்த கட்சிகளை சேர்ந்தவர்கள், ஊடகங்கள், அதிகாரிகள் பொறுப்பாக செயற்பட வேண்டும். இந்த இனம் அழிந்து போகின்ற கட்டத்திற்கு வந்து விட்டது. எனவே நாங்கள் பொறுப்பாக செயற்பட்டு தொடர்ந்தும் இந்த வியாபார வழியில் போகாமல் எமது வழிமுறையை மாற்ற வேண்டும். இன்று அரசியல் சாக்கடை என்று வந்து விட்டது. அதனால் தான் மக்கள் அதிலிருந்து விலத்துகின்றார்கள். ஒரு நல்ல அரசியலை உருவாக்குகின்ற நேர்மையான அரசியலை உருவாக்குகின்ற ஒரு முறைமைக்கு நாங்கள் மாற வேண்டும்.

## வாசகர்களே!

நிமிர்வு இதழை **www.nimirvu.org** இணையமூடாகவும் சமூக ஊடக பக்கங்களான **facebook.com/nimirvu** என்ற முகநூல் ஊடாகவும் **youtube.com** இல் **nimirvu** என்று தேடுவதனூடாகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.

இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம் **(noolaham.org)** இணையத்தின் ஊடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல் **(pdf)** வடிவில் வாசிக்க முடியும்.

# நிகழ்நிலை காப்பு சட்டமூலம் கருத்துரிமைக்கு சாவுமணி



துருவன்

**பொ**ருளாதார ரீதியாக மீள எழ முடியாமல் தவிக்கும் இலங்கை அரசு இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது. இந்த நிலையில் பொதுமக்களின் பேச்சு சுதந்திரத்தை முடக்கும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் 24.01.2024 புதன்கிழமை எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேறியுள்ளது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசினால் நாடாளுமன்றில் சமர்ப்பித்த அச்சட்டமூலம் 46 மேலதிக வாக்குகளால் திருத் தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அச்சட்டமூலம் ஊடாக அரசாங்கத்தை விமர்சிக்கும் அறிக்கைகள், முகநூல் உள்ளிட்ட சமூகவலைத்தளங்களில் பகிரப்படும் இடுகைகள் உள் ளிட்டவற்றை வெளியிடும் நபர்கள் மீது சட்ட ரீதியாக வழக்கு தொடர வழி வகை செய்யும். அவற்றை அகற்ற இணைய சேவை வழங்குநர்களுக்கு உத்தரவிடுவது உட்பட, பரந்த அளவிலான அதிகாரங்களைக் கொண்ட ஒரு ஆணையத்தை அரசாங்கத்த்தினால் அமைக்க முடியும். அச்சட்டமூலம் இணையவழித் துன்புறுத்தல், துர்நடத்தை மற்றும் மோசடி ஆகியவற்றுக்கு எதிராக பாதுகாப்பை வழங்குகிறது என்று சொல்லப்படுகிறது. அரச தலைவ ரால் நியமிக்கப்படும் குழுவே போலிச்செய்திகள், தகவல்கள் எவை என்பதை தீர்மானிக்கும். ஆணைக்குழு நியமித்த "நிபுணர்களுக்கு" சந்தேக நபர்களின் வளாகத்துக்குள் நுழைந்து சோதனையிட அதிகாரம் அளிக்கப்படும். சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு அதிக அபராதம் மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கடந்த 23.01.2024 செவ்வாயன்று இந்த சட்டமூலத்தை விவாதத்திற்கு சமர்ப்பித்தது. அதன் பிறகு 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் 62 நாடாளு மன்ற உறுப்பினர்கள் மட்டுமே நிகழ்நிலை காப்பு சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

**“ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலகம், ‘இந்த சட்டம் கிட்டத்தட்ட அனைத்து வகையான சட்ட பூர்வமான வெளிப்பாட்டையும் குற்றமாக்கக் கூடும். இது கருத்துச் சுதந்திரத்தின் மீது பெரும் விளைவை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குகிறது’ என்று கூறியுள்ளது.”**

குறித்த சட்டமூலமானது கருத்து சுதந்திரத்தை அடக்குகின்றது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமர்சித்தனர். ஊடகவியலாளர்கள், மத தலைவர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இதனை திரும்பப் பெறுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதி பணிப்பாளர் மீனாட்சி கங்குலி இந்த ஆண்டு இறுதியில் இலங்கை நாடாளுமன்றம் மற்றும் அரச தலைவர் தேர்தல்களுக்கு தயாராகி வரும் நிலையில், இந்த சட்டம் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையைக் கடுமையாக அச்சுறுத்தும் என்று சுட்டிக் காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலகம், இந்த சட்டம் கிட்டத்தட்ட அனைத்து வகையான சட்ட பூர்வமான வெளிப்பாட்டையும் குற்றமாக்கக் கூடும். இது கருத்துச் சுதந்திரத்தின் மீது பெரும் விளைவை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குகிறது என்று கூறியுள்ளது.

அப்பிள், அமேசான், கூகுள் மற்றும் யாஹூவை உறுப்பினர்களாகக் கொண்ட ஆசிய இணையக் கூட்டமைப்பு, இந்த சட்டமூலம் “இலங்கையின் எண்ணியல் (digital) பொருளாதாரத்தில் சாத்தியமான வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்” என்று கூறியுள்ளது.

இலங்கை நிபுணத்துவ இணைய ஊடகவியலாளர்கள் சங்கத்தின் (Professional Web Journalist's Association - PWJA) செயலாளர், இந்த சட்டமூலம் அவர்கள் எவ்வாறு தமது பணியை மேற்கொள்வதை பெரிதும் பாதிக்கும் எனத் தெரிவித்தார். “இணையவழி ஊடகத்தை நடாத்தும் அல்லது பணிபுரியும் பத்திரிகையாளர்கள் சுய தணிக்கையை நாடலாம் அல்லது அவர்களின் செய்தி வலைத்தளங்கள் கூட மூடப்படலாம்” என்று அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலான இணையவழி மோசடி, துஷ்பிரயோகம் மற்றும் தவறான அறிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இது தீர்வு காணும் என்று நாடாளுமன்றத்தில் இந்த சட்டமூலத்தை அறிமுகப்படுத்திய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கூறினார். பாலியல் துஷ்பிரயோகம், நிதி மோசடிகள், இணையத் துன்புறுத்தல் மற்றும் தரவு திருட்டு உள்ளிட்ட இணைய குற்றங்கள் தொடர்பாக கடந்த ஆண்டு 8,000 க்கும் மேற்பட்ட புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டை தாக்கிய மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை இன்னமும் மீளவில்லை. உணவு, எரிபொருள், மருந்துப் பொருள்கள் நெருக்கடி மற்றும் பிற தேவைகளுக்கு கடுமையான பற்றாக்குறையை அந்த பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தியது. அதனை தொடர்ந்து பொதுமக்களின் கடுமையான எதிர்ப்புகள் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பதவியில் இருந்து அகற்ற வழி வகுத்தது.

அதனைத் தொடர்ந்து வந்த ரணில் அரசாங்கம் தொழில் வல்லுநர்கள் மற்றும் வணிகங்கள் மீது புதிய உயர் வரிகளை விதித்துள்ளது. எரிசக்தி கட்டணங்களை உயர்த்தி உள்ளது. இவற்றால் பொதுமக்களின் அதிருப்தி அதிகரித்துள்ளது. இவ்வாண்டு ஜனாதிபதி தேர்தலை நாடு எதிர்கொள்ளவுள்ள நிலையில் பொதுமக்களின் அதிருப்தி மேலும் அதிகரித்து இரண்டாம் அரகலய போன்ற போராட்ட வடிவங்களுக்கு செல்லும் நிலை வரலாம் என்பதாலேயே ரணில் அரசாங்கம் இணையம் மற்றும் சமூகவலைத்தளங்களில் கருத்து சுதந்

திரத்துக்கு கடிவாளமிடும் இப்படியான மோசமான சட்டமூலங்களை கொண்டு வருவதாக சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை எதிர்க்கும் பொதுமக்கள்

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை பொது மக்கள் முற்றாக நிராகரிக்கின்றமை மாற்றுக் கொள்கை நிலையத்தின் ஆராய்ச்சி பிரிவான சமூக சுட்டி (social indicator) நடாத்திய கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது. நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் குறித்து அறிந்துள்ளதாக 28.4 வீதமானவர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை 71.1 வீதமானவர்கள் தாங்கள் அதனை நிராகரிப்பதாக தெரிவித்துள்ளனர்.

### நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

இந்த சட்டமூலம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விட்ட அறிக்கையில், இந்த நாட்டிலே ஊடக சுதந்திரத்தை, ஒரு பொதுமகனின் கருத்துச் சுதந்திரத்தை கூட இந்த அரசாங்கம் பறித்தெடுத்து கொண்டு இருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் போராட்டங்களில் ஈடுபடுகின்றவர்களை ஒடுக்க இவ்வாறான சட்டங்களை நடைமுறைபடுத்தி அவர்களை கைது செய்கின்ற தொலைதூர நோக்கோடு இந்த அரசு செயற்பட்டு வருகின்றது. இவர்கள் ஒருபொழுதும் தமிழர்களுடைய அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு கிழக்கில் அத்துமீறி நிகழுகின்ற குடியேற்ற திட்டங்கள், திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் என்பவற்றை நிறுத்த போவதில்லை. எமக்கான தீர்வு கிடைக்கும் வரை நாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு ஆக வேண்டும் என்பது வரலாற்று உண்மை.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நாள் ஒரு கரிநாள் என்பது சிங்கள மக்களுக்கும் பொருத்தமானதே. இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கும் எதிரான சட்டங்கள் உருவாக்கப்பட்ட வண்ணமே உள்ளன. இதனை அனைத்து தரப்புக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

### நாடாளுமன்றில் பா.உ சாணக்கியன் வெளியிட்ட கருத்துகள்

நிகழ்நிலைக் காப்பு வரைவுச் சட்டம் மூலம் பாதிக்கப்பட போவது தமிழ் மக்கள் தான். இலங்கையில் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் 30, 40 ஆண்டுகளாக தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும் அடக்குவதற்குமே பயன்படுத்தப்பட்டன.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் ஒரு பிரச்சனைக்கு எதிராக ஒரு பாரிய கடையடைப்பு போராட்டம் அல்லது ஹர்த்தால் அறிவித்தால் அந்த அறிவித்தலை வழங்குபவர்களை இந்த நிகழ்நிலை காப்பு சட்டத்தின் ஊடாக கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அதே போல 15 வருடங்களாக காணாமல் போன எமது உறவுகளுக்காக தாய்மார்களும், உறவினர்களும் வீதி வீதியாக, 2000 க்கும் மேற்பட்ட நாட்கள் கடந்தும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களைக் கூட இந்த சட்டமூலத்தினூடாக கைது செய்யக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன.

அரசாங்கத்தால் வடக்கு, கிழக்கில் காணப்படும் மக்களின் விகிதாசாரத்தை மாற்றுவதற்காக அங்கு பெரும்பான்மை சமூகத்தினரை மேலும் அதிகரிக்க சட்ட விரோத குடியேற்ற வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. அவற்றை எதிர்த்து கருத்து தெரிவிப்பவர்கள் கைது செய்யப்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

### நாடாளுமன்றில் பா.உ கஜேந்திரகுமார்

ஏற்கனவே சர்வதேச மட்டத்தில் உதவியை கேட்டுக் கொண்டிருக்கும் சிறிலங்காவுக்கு, அந்த சர்வதேச அமைப்புக்களினுடைய உதவிகள் வராமல் பண்ணுவதற்கு இந்த சட்டமூலம் வழியேற்படுத்தப்போகின்ற ஆபத்துக்கள் உள்ளன என்ற நிலையிலும், இது பாரதூரமான, ஜனநாயகத்தை மறுக்கக் கூடிய சட்டமூலம் என்று விமர்சனங்கள் இருக்கக் கூடிய நிலையிலும் அவசர அவசரமாக ஏன் அதனை நிறைவேற்றுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், அதற்கு காரணம் - அந்த பாரதூரமான ஜனநாயக விரோத செயல்பாடுகளை செயற்படுத்துகின்ற சட்டம் வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள் என்பதேயாகும்.

அப்படிப்பட்ட சட்டமூலத்தைக் கொண்டு வந்தால் தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு ஜனாதிபதியும், மக்களால் நிராகரிக்கப்பட்ட அமைச்சரும், மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ள

இந்த சபையும், மக்களின் உண்மையான கருத்துகளை வெளிவராமல் தடுத்து - உண்மையான விவாதங்கள் நடத்துவதற்கு அனுமதிக்காமல் இறுக்கி - அடுத்த தேர்தலுக்கு முகங்கொடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள். அப்படிப்பட்ட இருண்ட யுகத்தை உருவாக்கி அடுத்த தேர்தலுக்கு முகங்கொடுத்தால் நீங்கள் வெல்லலாம் என்று கருதுகிறீர்கள். ஆனால் - அது நிச்சயமாக நடக்காது.

### நாடாளுமன்றில் பா.உ ரவூப் ஹக்கீம்

நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் ஊடாக ஜனநாயகத்தை சீர்குலைத்து கருத்து முரண்படுவோரை முடக்குவதற்கு முயற்சிக்கப்படுகிறது. இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை அரசாங்கம் நெரிக்க எத்தனிக்கிறது. இதை நாங்கள் மிக கவனமாக நோக்க வேண்டும்.

இந்த நாட்டின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தில் எஞ்சியுள்ள சில காப்பீடுகளையும் கூட அப்புறப்படுத்துவதற்கு இந்த சட்டத்தின் ஊடாக அரசாங்கம் எத்தனிக்கின்றது. அத்துடன் இந்த நாட்டில் ஜனநாயகத்தை அழித்தொழிக்கப் போகின்றது. மக்களின் விமர்சனத்திற்கு அஞ்சி அரசாங்கம் மக்களை விட்டும் விரண்டோடுகின்றது. அந்த விமர்சனங்களை கட்டுப்படுத்துவதற்காகவே இப்பொழுது இந்த சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளது. கடுமையான தண்டனைகள் விதிக்கப்படப் போகின்றன. மக்களை நசுக்கும் சூழ்நிலை ஏற்படுத்தப்படப் போகின்றது. நிறைவேற்று அதிகாரம் அதனது நிலைப்பாட்டை திட்டவட்டமாக தெளிவாக்கியுள்ளது.

### எக்ஸ் சமூக வலைத்தளத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்

சிவில் சமூகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களின் கோரிக்கைகளை உள்ளடக்காமல் பாராளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்ட இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் சாத்தியமான தாக்கம் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

ஜனநாயக விழுமியங்களை ஆபத்தில் தள்ளுவதுடன் தெளிவற்ற மற்றும் மிகையான கடுமையான சட்டங்கள் முதலீடு மற்றும் எண்ணியல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்பதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

வெளிப்படைத் தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறும், எந்தவொரு சட்டமும் மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் இலங்கையை அமெரிக்கா வலியுறுத்துகிறது.

### குடிமக்கள் சமூகத்துக்கு எதிரான நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் இல்லாமல் ஆக்கப்பட வேண்டும் - SDP செல்வன்

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலம் எவ்வளவு தூரம் எங்களுடைய உரிமைகளை தடுக்கின்றது, மனிதத்தோடு வாழ்வதற்கு அச்சுறுத்தலாகின்றது என்பதை நாங்கள் புரிந்து கொள்வது மிகவும் அவசியமாக இருக்கின்றது. இது தவறு என்று ஏற்கனவே இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் 27.09.2023 அன்று அறிக்கை வெளியிட்டிருந்தது.

ஏனென்றால் இது நாங்கள் எங்கள் உரிமைகளோடு யதார்த்தத்தில் வாழும் சந்தர்ப்பத்தை இல்லாமலாக்குகின்றது என்பது மிகவும் முக்கியமானது. இங்கே நாங்கள் சில கேள்விகளை கேட்க வேண்டி இருக்கின்றது. சமூக ஊடகங்களின் சுதந்திரமான செயற்பாட்டை முழுமையாக நிராகரிப்பது பொருத்தமானதா? ஊடகவியலாளரின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு நாம் கொடுக்கும் பெறுமதி என்ன? ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட 5 பேர் கொண்ட ஒரு ஆணைக்குழு சட்ட அதிகாரம் அனைத்தையும் தங்களுடைய கரங்களிலே எடுத்துக் கொண்டு செயற்படுவது பொருத்தமானதா? இது ஜனநாயகமா? இந்த நிகழ்நிலை ஒழுங்குக்கு அமைய பயனாளர்களுடைய அடையாளங்கள் கூறப்படும். ஆகவே அவ்வாறு அடையாளங்கள் கூறப்பட்டால் அவர்களுடைய தனி மனித உரிமைக்கு என்ன நடக்கும்? பாதுகாப்பிற்கு என்ன நடக்கும்? இன்று நாட்டிலே வளர்ந்து வருகின்ற எண்ணியல் (digital) ஊடக தொழில்வாய்ப்புகளை எவ்வாறு பயன்படுத்தப் போகிறோம்? எத்தனையோ பேர் இதனை தங்கள் வாழ்வாதாரமாக வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இது அச்சுறுத்தலாக வந்துள்ளது.

> **"எல்லா சட்டமூலங்களும் எல்லோருக்கும் தெரிய வேண்டும். வெளிப்படைத் தன்மையோடு வருகின்ற பொழுது தான் அது விவாதிக்கப்பட்டு முறையான முன்னெடுப்பிற்கு போகும். ஆகவே இந்த முறையே பிழை. இந்த நிகழ்நிலை காப்பு சட்டமூலம் கொண்டு வரப்பட்ட முறையே பிழை."**

ஆகவே இந்த நேரத்திலே இதற்கு எதிராக 51 வழக்குகள் உச்ச நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டன. அப்பொழுது உச்ச நீதிமன்றம் அங்கே சொல்லி இருக்கிறது, சில திருத்தங்களை செய்ய வேண்டும் என்று. அந்த திருத்தங்கள் எல்லாவற்றையும் கொண்டு வந்தார்களோ என்பது தெரியாது. என்னென்ன திருத்தங்கள் என்பது கூட மக்களாகிய எங்களுக்கு தெரியாது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட தெரியுமோ தெரியாது.

இதிலே நாங்கள் ஒரு விடயத்தை ஆழமாக பார்க்க வேண்டும். பாராளுமன்றத்தில் உள்ள ஒரு பிரச்சனையை பார்க்க வேண்டி இருக்கிறது. அது என்னவென்றால், ஒரு சட்ட மூலம் வருகின்ற பொழுது அது சட்டமாக்குவதற்கு போதுமான அவகாசம் இருக்கிறதா என்ற பிரச்சனை இருக்கிறது. எல்லா சட்டமூலங்களும் எல்லோருக்கும் தெரிய வேண்டும். வெளிப்படைத் தன்மையோடு வருகின்ற பொழுது தான் அது விவாதிக்கப்பட்டு முறையான முன்னெடுப்பிற்கு போகும். ஆகவே இந்த முறையே பிழை. இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் கொண்டு வரப்பட்ட முறையே பிழை.

அதனுடைய உள்ளடக்கமும் பிழையே. எல்லோருக்கும் தெரிய வேண்டும். ஜனநாயகத்திற்கு இடம் இல்லை. மனித உரிமைகளுக்கு இடம் இல்லை. அத்தோடு இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்திலே சில சரத்துகள் சமயங்களை பற்றி சொல்கின்றன. சமயங்களின் உரிமைகளை பற்றி சொல்கிறது. ஒரு சமயத்தவர் வழிபடுகின்ற பொழுது அல்லது அவர்கள் ஒரு கூட்டத்தை வைக்கின்ற பொழுது இன்னொரு சாரார் அதற்கு எதிராக ஒன்றும் கதைக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. இதை வெளியாக பார்த்தால் எல்லாம் நல்லதாக தெரியலாம் ஆனால் ஆழமாக பார்க்கின்ற பொழுது தான் உள்ள பிரச்சனை தெரியும்.

எங்களுடைய குருந்தூர் மலை பிரச்சனையை எடுத்துக் கொண்டால் அங்கே ஏற்கனவே சைவ சமயம் தான் இருந்தது. அது அவர்களுடைய புனித இடம். ஆனால் அதற்கு பிறகு பௌத்தர்கள் தங்களுடைய புனித இடமாக்க பார்க்கிறார்கள். அவர்களுடைய வழிபாட்டு செயற்பாட்டினை பார்க்கின்ற பொழுது சைவசமயத்தை சேர்ந்தவர்கள் கொஞ்ச பேர் சென்று இது தவறு என்று சொன்னால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள். ஏனென்றால் ஒரு சமய நடவடிக்கையை அவர்கள் சீர்க்குலைத்தார்கள் என்ற சரத்து தான் அங்கே வரும். ஆனால் அது அல்ல உண்மை.

அதே போல இன்னொரு சரத்திலே இந்த மெய்நிகர் வழியாக வருகின்ற ஒரு செய்தி யாருக்கும் காயத்தை ஏற்படுத்தினால் அது பிரச்சனை என்று சொல்லப்படுகின்றது. யாருக்கு காயம் எப்படி வருமென்று எப்படி முடிவெடுப்பது? அதற்கு சட்டமூலங்கள் வருகின்ற பொழுது வரைவிலக்கணங்கள் வேண்டும். இந்த கருத்துடைய வரைவிலக்கணம் இதுதான். இதனுடைய விளக்கம் இதுதான் என்று சொல்லப்பட வேண்டும். ஆனால் அது இங்கே சொல்லப்படவில்லை. வரைவிலக்கணங்கள் இல்லாதபடியால் இதிலே என்ன கருத்தோடு எதை வைத்து பார்ப்பது என்பது பாரிய பிரச்சனையாக இருக்கின்றது.

ஆகவே இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீளப்பெற வேண்டும். அதை வைத்துக் கொண்டு நாங்கள் எதுவும் செய்ய முடியாது. பிரதானமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முக்கியமான ஒரு பொறுப்பு இருக்கிறது. அவர்கள் இதைப் பற்றி ஆழமாக விவாதித்து இது அர்த்தமில்லாதது என்பதை வெளிப்படுத்த வேண்டும். அல்லது திருத்தங்கள் கொண்டு வருவது என்றால் என்ன என்ன திருத்தம் கொண்டு வரலாம் என்பதை விவாதிக்க வேண்டும்.

தனிப்பட்ட முறையிலே எந்தவொரு திருத்தமும் கொண்டு வந்து இதனை சரிப்படுத்தலாம் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் உச்ச நீதி மன்றம் திருத்தத்தை கொண்டு வரலாம் என்று சொல்லி இருக்கிறது. எனவே அந்த திருத் தங்கள் என்ன என்பதை நாங்கள் பார்க்க வேண்டும்.

இதைப் பற்றி கதைக்கின்ற பொழுது பலரும் சொல்ல பார்ப்பது நிகழ்நிலை ஊட கங்களின் வழியாக பெண்கள், சிறுவர்கள் போன்றாருக்கு எதிராக வன்முறை இழைக்கப் படுகின்றது, அல்லது காசு மோசடிகள் நடக் கின்றது என்பதை. அவற்றை கையாள்வதற்கு எங்களிடம் வேறு சட்டங்கள் இல்லையா? இருக் கின்ற சட்டங்களை நாங்கள் பாவிக்கலாம் தானே? அவற்றை விட்டுவிட்டு இந்த சட்டத்தினூ டாக தான் இதனை பார்க்க வேண்டும் என்று முனைகிறோம். ஆகவே இந்த நிகழ்நிலை காப்பு சட்டம் எந்த விதத்திலும் பொருத்தமானது அல்ல. இங்கே சொல்ல வேண்டிய மிகவும் முக்கியமான ஒன்று, எங்களிடம் இன்று இருப் பதாக சொல்லப்படுகின்ற உரிமைகள் கூட இதனாலே பறி போய்விடும். ஆகவே இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் எங்களுடைய நிகழ்கால அரசியல் அமைப்பின் கடுமையான முரண்பாடுகள் இதிலே இருக்கிறது.

குறிப்பாக அரசியல் அமைப்பில் குறிப்பி டப்பட்டுள்ள மக்களின் இறையாண்மை, மக்க ளின் நீதித்துறை, அதிகாரம் என்பவற்றை இந்த சட்டம் மீறுகிறது. அத்துடன் தெளிவற்ற தன்மை பிரச்சனையாக உள்ளது. முறையான வரைவிலக்கணங்கள் இல்லாததும் இன்னொரு பிரச்சனை. சிந்தனை, மனச்சாட்சி மற்றும் மத சுதந்திரம் ஆகியன கூட அடிப்படையிலே உத் தரவாதம் இல்லாமலாக்கப்படுகின்றன. ஆகவே குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பேணப் படுவதற்காகவும் அவர்கள் கருத்துகளை வெளி யிடுவதற்கு சுதந்திரம் இருப்பதற்காகவும் பேச்சு சுதந்திரம், வெளிப்படுத்தும் சுதந்திரம் போன்ற வற்றிற்காகவும் அவர்கள் விரும்புகின்ற ஒரு தொழிலை சுதந்திரமாக செய்வதற்காகவும் இந்த சட்டம் இல்லாமலாக்கப்பட வேண்டும்.

முழுமையாக இதனை பார்த்தால் இது ஜனநாயகத்திற்கு எதிரானது, வாழ்வாதார முயற்சியுடையோருக்கு எதிரானது. ஆகவே இவற்றை நாங்கள் தவறு என்று சொல்வதும் சமய விழுமியங்களின்படி பொருத்தமற்றது என் பதை சொல்வதும் தான் மிகவும் முக்கியமா னவை. எங்களுக்கு இருக்கின்ற சுதந்திரத்தை நாங்கள் எந்த அடிப்படையிலும் விட்டுக் கொடு க்க முடியாது. எங்களுக்கு சட்ட ரீதியாக இருப்பதாக சொல்கின்ற சுதந்திரம் கூட உண் மையில் யதார்த்தத்தில் இல்லை. இது எல் லோருக்கும் தெரியும். அப்படி இருக்கும் பொழுது சட்ட ரீதியாகவே எங்களை கட்டி வைப்பதற்காக தான் இந்த நிகழ்நிலை காப்பு சட்டம் வந்துள்ளது. அது ஊடகத்துறை உட்பட நீதியை, உண்மையை கதைக்க முடியாமல் செய்ய போகின்றது. இது மிகவும் ஆபத்தானது. எங்களுடைய பேச்சு சுதந்திரம், சிந்தனை சுதந் திரம் எல்லாம் பறிக்கப்பட்டால் நாங்கள் இயந் திரங்களாகப் போகிறோமா? நிகழ்ச்சி நிரல் செய்து வைக்கப்பட்டதை மட்டும் கதைத்து கொண்டிருக்கின்ற இயந்திரங்கள் ஆக்கப்படப் போகிறோம் என்றால் அது எந்தவிதத்திலும் பொருத்தமற்றது. ஆகவே இப்படிப்பட்ட முயற் சியை நாங்கள் கண்டிக்கிறோம்.

மக்கள் போராட்டங்களை முடக்குவதற்கு இது கட்டாயம் பாவிக்கப்படும். ஜனநாயக வெளியிலே நாங்கள் சொல்ல வேண்டியவற்றை சொல்ல முடியாமலும் முடக்கப்படுவோம். ஆகவே இதனை சட்டத்திற்கு அப்பாலே மக் கள் போராட்டமாக நாங்கள் இதை பார்க்க வேண்டும். வெளிநாட்டு மனித நேய அமைப்பு க்கள், உள்நாட்டு அமைப்புகள் பல சமய தலைவர்கள் எல்லோருமே இது தவறு என்று சொல்லி இருக்கிறார்கள். கடந்த புரட்டாசி மாதம் இந்த சட்ட முன்மொழிவு வந்ததிலிருந்து பல தரப்பட்ட போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. பலதரப்பினரும் சேர்ந்து தவறு என்று சொல் வது தொடர்ந்து நடைபெற்று கொண்டு வந் திருக்கிறது. தற்போது மக்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி பாராளுமன்றத்தில் நிறை வேற்றி இருக்கிறார்கள். இந்த நாட்டில் மக்களின் அபிலாசைகளுக்கு இடமில்லை என்று மீண்டும் ஒரு முறை ஆட்சியாளர்கள் முகத்தில் அறைந்து சொல்லி இருக்கிறார்கள்.

(24ஆம் பக்க தொடர்ச்சி)

சட்டக்கல்வியை பொறுத்தவரையில் ஆங்கில கல்வி தான் நன்றாக இருக்கும். மாணவர்களு டைய எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு உகந் ததாக இருக்கும் என்ற கருத்தை முன்வைக் கின்றார்கள். இரண்டாவது, நாங்கள் தமிழ் மொழி கற்கையை தொடங்கினால் இங்கே சிங்கள மொழி கற்கையையும் ஆரம்பிக்க வேண்டிய ஒரு நிலைமை வரும் என்கின்ற ஒரு கருத்தையும் முன்வைக்கின்றார்கள்.

அரசாங்கத்தினை பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததை தொடர் ந்து தமிழர்கள் மீள வரக் கூடாது என்பதில் மிக கவனமாக இருக்கின்றது. ஆகவே வடக்கு கிழக்கு தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களை பொறுத்தவரை எந்த எந்த வழிகளில் எல்லாம் சிங்களமயமாக்கப்பட முடியுமோ அந்தந்த வழி களில் எல்லாம் சிங்களமயமாக்கல் முயற் சியை அது மேற்கொண்டு வருகின்றது. அத ற்கு ஒரு கருவியாக தான் இந்த பல்கலைக் கழகங்களில் ஆங்கில மொழிக் கல்வி என்ப தற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஆங்கில மொழிக் கல்வி வருகின்ற போது சிங் கள மாணவர்கள் கூடுதலாக கற்கக் கூடிய நிலைமை என்பது உருவாகும் என்பது தான் இதற்கு பின்னால் உள்ள நோக்கமாக இருக் கின்றது.

இன்றைக்கு வவுனியா பல்கலைக்கழகத் திலும் எல்லா பீடங்களிலும் சிங்கள மாணவர் கள் தான் கூடுதலாக இருக்கின்றார்கள். இத னால் அங்கே மாணவர் மன்றத்தில் உப தலைவர் பதவி கூட உண்மையில் தமிழ் மாணவர்களு க்கு வழங்கப்படுவதில்லை என்று செய்திகள் வந்திருக்கின்றன. அங்கு வழங்கப்படுகின்ற உணவு வகைகளில் கூட சிங்கள உணவு வகைகள் தான் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. கிழக்கு பல்கலைக்க ழகத்திலும் சிங்கள மாணவர்களின் நிலை தான் மேல் நிலையில் இருக்கின்றது. ஆனால் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மட்டும் அந்த பல்கலைக்கழக நிர்வாகம் முஸ்லீம் மாணவர்களை தான் பெரும்பான்மையாக வைத் திருக்க முயற்சி எடுத்துக் கொண்டு இருக் கின்றது என்று கூறப்படுகிறது.

இதில் அரசாங்கத்தின் வியூகத்தின் பின் னால் இங்கு இருக்கின்ற தமிழ் பல்கலைக்கழ கங்கள் இழுபட்டுப் போகின்றனவா என்கின்ற ஒன்றையும் நாங்கள் சந்தேகிக்க வேண்டி இருக் கின்றது. இதைவிட இன்றைக்கு இலங்கை யோடு தொடர்புபட்ட இந்தியாவோ அமெரிக்கா உட்பட்ட மேற்குலகமோ அவர்களும் இங்கு திரும்ப ஒரு தமிழ் மீள் எழுச்சி வரக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கிறார்கள். மீள் எழுச்சி வரக் கூடாது என்றால் இறைமை அரசியலை தரக் குறைப்பு செய்ய வேண்டி இருக்கின்றது. ஆகவே அதில் அவர்கள் அக்க றையாக இருக்கிறார்கள். இதனால் இவர்களும் இப்படியான ஒரு சிங்கள மயமாக்கலை விரும்பு வது போல தான் தோற்றம் ஒன்று தெரிகிறது.

இதில் அரசை பொறுத்தவரையில் இர ண்டு நகர்வுகளில் கவனமாக இருக்கும். ஒன்று யாழ்ப்பாண மாவட்டத்தை பலவீனமாக்குவது, இரண்டாவது யாழ். பல்கலைக்கழகம் தமிழ் அரசியலில் மையமாக இருப்பதை இல்லாமல் செய்வது. யாழ்ப்பாண மாவட்டத்தை பலவீனமா க்காமல் சிங்கள அரசினுடைய நிகழ்ச்சிநிர லையும் இங்கு நகர்த்த முடியாது. இந்தியா வினுடைய நிகழ்ச்சிநிரலையும் நகர்த்த முடி யாது. மேற்குலகத்தின் நிகழ்ச்சிநிரலையும் நகர்த்த முடியாது. ஆகவே ஏதோ ஒருவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தை பலவீனமாக்க வேண் டும் என்ற கருத்து மூன்று தரப்பிடமும் இருக் கிறது. இது முக்கியமான விடயம்.

இரண்டாவது யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்திற்கு ஒரு வரலாறு இருக்கிறது. தொடர்ச்சி யாகவே தமிழ் அரசியலினுடைய மையமாக இருக்கிறது. அதுவும் அந்த போர் காலங்களில் அதனுடைய பங்களிப்பு என்பது மிக உச்சமாக இருந்தது. கருத்தியல் பங்களிப்பும் நடைமுறை பங்களிப்பும் உச்சமாக இருந்தன. இந்த நிலை அரசை பொறுத்தவரையில் தங்களுடைய அரசி யல் நிகழ்ச்சிநிரலை நகர்த்துவதில் சிக்கலாக இருக்கின்றது. ஆகவே இந்த உச்ச நிலையை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதிலும் அர சாங்கம் வலு கவனமாக இருக்கிறது போல தான் தெரிகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஒரு பண்பாட்டு பல்கலைக்கழகம் என்று சொன்

> கொழும்பில் சென்று படிப்பதென்றால் அது இயலாத காரியம். இதனால் பல மாணவர்கள் சட்ட பீடத்தை தவிர்ந்து ஏனைய கலை பீடங்களுக்கு சென்ற நிலைமை கூட இருக்கின்றது. இது உண்மையில் மாணவர்களின் உரிமைகளை பறிக்கின்ற ஒன்றாக தான் நாங்கள் பார்க்கலாம்.

னால் எல்லா பீடங்களிலும் தமிழ் மாணவர்கள் பெரும்பான்மையாக இருக்கின்ற போது தான் பண்பாட்டு பல்கலைக்கழகமாக இருக்கும். இல்லையென்றால் ஒருநாளும் பண்பாட்டு பல்கலைக்கழகமாக பேண முடியாது. இன் றைக்கு கலை பீடத்தை தவிர ஏனைய எல்லா பீடங்களிலும் சிங்கள மாணவர்களின் தொகை தான் அதிகமாக இருக்கிறது. ஓரளவுக்கு 50% இற்கு 50% என்ற வகையில் இருந்தாலாவது ஓரளவுக்கு சகித்து கொள்ளலாம். ஆனால் இருப்பது 75% சிங்கள மாணவர்களாக இருக்கி றார்கள். 25% தமிழ் மாணவர்களாக இருக்கின்ற ஒரு நிலைமை தான் இருக்கிறது. இன்றைக்கு சட்ட பீடத்தை பொறுத்தவரையில் 80% மாண வர்கள் சிங்கள மாணவர்களாக இருக்கின்ற நிலைமையை நாங்கள் காண்கிறோம். இப்படி இருக்கும் போது எப்படி தமிழ் பண்பாட்டு பல் கலைக்கழகமாக பேணுவது என்ற ஒரு சிக்கல் உருவாகி வருகின்றது.

தென்னிலங்கை பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களின் பெரும்பான்மையை அவர் கள் அங்கு அங்கீகரிப்பார்களா என்றால் அது ஒருபோதும் இல்லை. பாடசாலைகளில் கூட ஒரு மதத்தினுடையை பாடசாலையாக இருந் தால் அந்த மதத்தின் பெரும்பான்மையை தான் அங்கு கூடுதலாக பார்க்கும். கொழும்பில் தமிழ் பிரதேசங்களில் உள்ள இரு மொழி பாடசாலைகளில் கூட சிங்கள மாணவர்களின் தொகை தான் கூடுதலாக இருப்பதை நாங்கள் பார்க்கலாம்.

கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை பிர தேசங்கள் தமிழ் மக்கள் அதிகமாக வாழ் கின்ற பிரதேசங்கள். ஆனால் அங்கு தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை மிக குறைவு. சிங்கள மாணவர்களுக்கு 4 வகுப்புக்கள் இரு ந்தால் தமிழ் மாணவர்களுக்கு ஒரு வகுப்பு என்கின்ற நிலைமை தான் அங்கு இருக்கிறது. அங்கெல்லாம் இருக்கும் இந்த நிலைமையை நீங்கள் யாழ்ப்பாணத்தில் உருவாக்க அனு மதிக்க முடியாது. தமிழ் மாணவர்கள் தமிழில் படிக்க வேண்டுமென்றால் கொழும்புக்கு தான் போக வேண்டும். கொழும்பில் தான் இப்போது மூன்று மொழிகளிலும் படிக்க கூடிய வாய்ப்பு இருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சென்று படி ப்பது என்பது சாதாரணமான விடயம் அல்ல. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் படிப்பதே பொருளாதார ரீதியாக கஷ்டமான நிலைமை யாக இருக்கின்றது. அவர்கள் கொழும்பில் சென்று படிப்பதென்றால் அது இயலாத காரி யம். இதனால் பல மாணவர்கள் சட்ட பீடத்தை தவிர்ந்து ஏனைய கலை பீடங்களுக்கு சென்ற நிலைமை கூட இருக்கின்றது. இது உண்மையில் மாணவர்களின் உரிமைகளை பறிக்கின்ற ஒன்றாக தான் நாங்கள் பார்க்கலாம்.

இதை விட எப்போதும் தாய்மொழியில் கல்வியை கற்றால் உச்ச நிலையில் புரிந்து கொள்ள கூடிய நிலைமை ஒன்று உருவாகும். இது ஆங்கில மொழியில் கற்கும் போது வராது. மாணவர்களுக்கு விளங்க வேண்டும் என்பதற்காக தாங்கள் ஆங்கில மொழியில் படிப்பிப்பதற்காக நன்றாக கீழிறங்கி படிப்பிக்க வேண்டி இருக்கிறது என்று ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகத்தினுடைய சட்ட பீட தலைவராக இருந்த குருபரன் அவர்கள் ஒரு தடவை கூறியிருந்தார். இதனையே நாங் கள் தமிழ் மொழியில் படிப்பிப்பதென்றால் உச்ச நிலையில் படிப்பிக்க கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று அவர் தன்னுடைய கரு த்தை முன்வைத்திருந்தார். ஆகவே ஒரு தாய் மொழியில் படிப்பிக்கும் போது வருகின்ற வீரியம், வினைத்திறன் என்பது உண்மையிலே ஆங்கில மொழியிலே படிக்கும் போது வராது.

இங்கு வருகின்ற எதிர் கருத்துகள் என்ன

வென்றால் ஆங்கில மொழியில் திறமையின்மை காரணமாக தமிழில் படித்து வருகின்ற சட்டத் தரணிகள் உயர் நீதிமன்றத்திலோ, மேல் நீதி மன்றத்திலோ சென்று வழக்காட முடியாது என்கிற ஒரு கருத்தை முன்வைக்கிறார்கள்.

அதில் உண்மைகள் இல்லாமல் இல்லை. ஆனால் நாங்கள் சமாந்தரமாக ஆங்கில கல்வியை கொடுப்பதில் அதிக அக்கறை செலுத்துவோமாக இருந்தால் இந்த நிலைமையை மாற்றி கொள்ளலாம். இன்றைக்கு தமிழ் மொழி மூலம் படித்த பலர் சிறந்த சட்டத்தரணிகளாக இருக்கிறார்கள். ரவூப் ஹக்கீம் என்றாலும் சரி, விக்கினேஸ்வரன் என்றாலும் சரி தமிழில் படித்தவர்கள். அவர்கள் ஆங்கிலத்திலேயே சிறந்து நீதிபதியாக இருந்தவர்கள். ஆகவே இந்த காரணம் பெரியளவுக்கு பொருத்தமானதாக இல்லை.

இரண்டாவது காரணம், தமிழ் மொழி கற்கையை தொடங்கினால் சிங்கள மொழி மாணவர்கள் சிங்கள கற்கையை கேட்பார்கள். சிங்கள மொழியில் படிப்பதற்கு அவர்களுக்கு பல பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவர்கள் அங்கே போய் படிப்பார்கள். ஆகவே இந்த கருத்தையையும் நாங்கள் ஏற்ற கருத்து என்று சொல்லிவிட முடியாது.

இங்கே நாங்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று, இந்த தொடர்ச்சியாக தமிழர் தாயகத்தில் ஏற்படுகின்ற சிங்கள மயமாக்கல் செயற்பாட்டை எப்படி தடுத்து நிறுத்துவது. மற்றது, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை ஒரு பண்பாட்டு பல்கலைக்கழகமாக எப்படி மாற்றுவது. இந்த இரண்டும் தான் மிக முக்கியமான விடயங்கள். ஆகவே இந்த இரண்டு விடயங்களையும் பார்த்தோமானால் உண்மையில் தமிழில் படிக்க கூடியதான ஒரு சூழ்நிலையையும் உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். இதில் உண்மையில் சில விடயங்களை பல்கலைக்கழக நிர்வாகம் கவனத்தில் எடுக்க வேண்டும். அதில் ஒன்று என்னவென்றால் பண்பாட்டு பல்கலைக்கழகமாக மாற்றுவதென்றால் எல்லா பீடங்களிலும் 60% மேல் தமிழ் மாணவர்கள் இருக்க வேண்டும். தமிழ் பெரும்பான்மை இருக்கும் போது தான் பண்பாட்டு பல்கலைக்கழகமாக மாற்ற முடியும்.

இன்றைக்கு தென்கிழக்கு பல்கலைக் கழகத்தை முஸ்லீம்கள் தங்களுடைய பண்பாட்டு பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும் என்பதற்காக அந்த விகிதாசாரத்தை பேணுவதாக தான் செய்திகள் வருகின்றன. தமிழ் பல்கலைக்கழகத்தில் மாத்திரம் தான் இந்த நிலைமை இருக்கிறது. ஆகவே நாங்கள் பண்பாட்டு பல்கலைக்கழகமாக பேணுவதற்கு 60% என்ற விகிதாசாரத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இதை விட இன்றைக்கு முகாமைத்துவ பீடம் கூட நாங்கள் படிக்கின்ற காலங்களில் தமிழ் மொழி மூலம் தான் நடந்தது. தற்பொழுது அதையும் ஆங்கில மொழி மூலம் மாற்றி இருக்கிறார்கள். ஆகவே அங்கும் தமிழில் படிப்பதற்கான சூழலை உருவாக்க வேண்டும். ஆங்கில கல்வியை வைத்து கொள்ளுங்கள், ஆனால் சமாந்தரமாக தமிழில் படிப்பதற்கு ஒழுங்குகளை செய்ய வேண்டும் என வற்புறுத்துகிற தேவை இன்றைக்கு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆகவே இது பற்றி அக்கறை உள்ளவர்கள் இது தொடர்பான உரையாடலை தற்போதே ஆரம்பிப்பது தான் மாற்றங்களை கொண்டு வரும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

---

நிமிர்வு இதழ் தொடர்பிலான தங்களின் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். மேலும், வேறெங்கும் பிரசுரமாகாத தங்களின் அரசியல் சமூகம், பொருளாதாரம், பண்பாடு சார்ந்த கட்டுரைகளையும் அனுப்பி வைக்கலாம். தரமானவை பிரசுரிக்கப்படும்.

–ஆசிரியர்–

**நிமிர்வு வாசகர்களே**
தொடர்புகளுக்கு...

**தபால் முகவரி:**
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல:0212232121**
*மின்னஞ்சல் முகவரி:*nimirvueditor@gmail.com

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழில் சட்டக்கல்வி அவசியம்




சி. அ யோதிலிங்கம்

**யா**ழ்ப்பாண பல்கலைக்கழக சட்ட பீடத்தில் தமிழ் மொழி கற்கையையும் ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை தற்பொழுது மேலெழத் தொடங்கி இருக்கின்றது. தற்போது படிக்கின்ற மாணவர்கள் தான் இதை பேசுபொருளாக்கி இருக்கின்றார்கள். தற்பொழுது சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பினரும் இது தொடர்பாக கருத்துகளை கூறி வருகின்றார்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தினுடைய விரிவுரையாளராக இருக்கின்ற இளம்பிறையன் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஒரு பண்பாட்டு பல்கலைக்கழகம். அந்த பண்பாட்டு பல்கலைக்கழகம் என்ற நிலைமை பலவீனமாகி வருகின்றது. தமிழ் மொழி கற்கையை ஆரம்பிக்காததால் இந்த நிலைமை இன்னும் மோசமாகி வருகின்றது என்ற கருத்தை முன்வைத்திருக்கின்றார். அதேவேளை ஆய்வாளர் நிலாந்தன் அவர்கள் இந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக கலை பீடத்தினை தவிர ஏனைய பீடங்களில் சிங்கள மாணவர்களின் தொகை அதிகமாகி இருப்பதனால் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஒரு பண்பாட்டு பல்கலைக்கழகம் என்ற நிலையிலிருந்து பலவீனமாகி வருகின்றது என்கிற ஒரு கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

கொழும்பு மைய தமிழ் ஆர்வலர்கள் ஆங்கில மொழி கல்வி அவசியம், ஆங்கில மொழி கல்வி தான் சட்டத்திற்கு உகந்தது என்கிற ஒரு கருத்தை முன்வைத்து இருந்தனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சட்ட பீடம் இரண்டு வகையான கருத்துகளை முன்வைக்கிறது. ஒன்று,

(21ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 28.01.2024 அன்று வெளியிடப்பட்டது.